...ிறு வெளியீடு. விலை 0—1—3. REGD. No. M.

# திராவிடநாடு



மலர் 3.] 14—1—45 [இதழ் [illegible]

## நாடாண்டாயே!

—:(o):—

நாடாண் டாயேத மிழே நீ
ஞாலம்ஆண்டாய் வாழ்வும் ஈந்தாயே

★

ஏடு யாவும்நீயே மக்கள் எண்ணம்
எவைகளும் நீயே பகைதீர்ந்தே
நாடுமீளவே கேடுதீரவே
நாமினி இலங்கி நனிவாழவே

★

இனிதாகிய தமிழே எனதுயிரே
இளைஞர்க்கிடை மூளுகின்ற உணர்வே
கனியினும் மிகுசுவையே உனைநான்
காணுப்போது கவலைமிகுந்திடுதே
கனல்நிகர் ஆரியர் நலியேசெயினும்
கலையாவும் வெந்துபோகச் செயினும்
புனலிடைத் தமிழ்நூற்களெலாம் போயினும்
புதுமை இளமை எனும்படிசெந்தமிழ் (நாடாண்)

பாரதிதாசன்

# அம்மாமிகள் அழுகுரல்!

*இந்துசட்டத்திருத்தத்தை எதிர்க்கும் பெண்களைக் கிணற்றுத்தவளைகள் என்று டாக்டர் முத்துலட்சுமி அம்மையார் கூறினார் அதுஎந்த ரகமான தவளைகள்! என்பதைப் புதுவை, "தொழிலாளர் மித்திரன்" விளக்குகிறார், அதுஇது.*

"ஹிந்து" மதம் என்று அழைக்கப்படும் மதத்திற்கு "ஹிந்து" என்ற வார்த்தையே சொந்தமானதல்ல. இதுவே ஆராய்ச்சி வல்லுனர்களின் தேர்ந்த முடிவு. ஹிந்துமத நூற்கள் எனப்படும் எந்த ஒரு நூலிலும் "ஹிந்து" எனும் பதம் கையாளப்பட்டிருக்கவில்லை. யாரோ வெளிநாட்டான் சூட்டியபெயரைச்சுமந்துகொண்டுநாம்ஆட்டம் போடுகிறோம்.

திராவிடர்களாகிய நமக்கும் ஹிந்து மதத்திற்கும் எந்தவிதத் தொடர்புங் கிடையாது. உண்மை இவ்வாறு இருந்தாலும் "வலையில் சிக்கியமான்" போன்று ஹிந்துமதச் சுழலில்சிக்கித்தொல்லைப்படுகிறோம். ஹிந்துமதம் என்றாலே பார்ப்பனமதம் என்பதுதான் பொருள் வரலாற்றுஆசிரியர்கள் பலரும் இந்த முடிவையே வற்புறுத்தியிருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள மதங்களுக்கெல்லாம் தனித்தனியாக அவைகளைக்கண்ட தலைவர்களும், தனித்தனியாக வேதநூற்களும், தனித்தனியாகக் கொள்கைகளும் இருக்கின்றன. அதாவது கிறித்தவமதத்திற்குஇயேசுநாதர் குருவாகவும் விவிலிய நூல் வேதமாயும்இருக்கிறது. இஸ்லாம் மதத்திற்கு நபிநாயகம் குருவாகவும் திருக்குரான் வேதமாகவும் இருந்துவருகிறது. புத்த மதத்திற்குத் திரிபீடகம் வேதநூலாகவும், புத்தர் குருவாகவும் எண்ணப்படுகிறது. ஆனால், ஹிந்துமதம் என்று கூறப்படுகிற மதத்திற்கு இது ஒன்றுங்கிடையாது. செந்நிறச் சிவனார் முதல் நேற்று விளம்பரப்படுத்தப்பட்ட 'சாயிபாபா' வரையில்தெய்வங்கள்தான். நான்குவேதம் என்று சொல்லப்படுவது முதல் நடுத்தெரு நாறவாயன் தெம்மாங்குப்பாட்டுவரையில் வேதநூற்கள்தான். விசித்திரமான மதம்! விசித்திரமான வேதநூற்கள்!

பிறப்பினாலே உயர்வு தாழ்வு கற்பிக்கும் பித்தலாட்டம் வேறுமதக் கோட்பாடுகளில்கிடையவேகிடையாது. ஆனால் நமது ஹிந்துமதத்திலோ அந்தத் துர்நாற்றக்கொள்கை தவிர வேறு நல்ல முறையேகிடையாது. "திருக்குறளை மறுவறநன்குணர்ந்தவர்கள்உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" எனக் காலஞ்சென்ற அறிஞர் சுந்தரம்பிள்ளை இதனால்தான் சாற்றினார்போலும்.

பார்ப்பனர்க்கு வாழ்வும்—உயர்வும் மற்றவர்க்குத் தாழ்வும்—இழிவும் தருவதுதான் ஹிந்துமதத்தின் மூலக்கொள்கை. இன்று இருக்கும் சமூக அமைப்பையும், சாஸ்திரங்களென்னச் சொல்லப்படுபவைகளையும் ஒருமுறை உற்றுநோக்கினாலும் இந்த உண்மை தெற்றென விளங்கும். சர். ராதாகிருஷ்ணன் முதல் சங்கராச்சாரியார் ஈறாக ஒலித்துவரும் வார்த்தைகள் இனிமையும் இன்பமும் தருவதுபோல்தோன்றினாலும், மற்றவர்கள் பட்டுவரும் இன்னல்களைக்களைய அதில் ஒரு வார்த்தையும் இருப்பதில்லை. இதற்கு நேர்மாறாகக் கானலை நீராகவும், எட்டியை இனிப்பாகவும். உள்ளியை நன்மணமாகவும் கொள்ளவேண்டுமெனும் தத்துவார்த்தக்கோணல் பேச்சேநிறைந்திருக்கும். இவைகளெல்லாம் பார்ப்பனர்களுக்கு வாழ்க்கைவளத்தைத் தேடித்தரவும் மற்றவர்களைத் தாழ்த்திக்கொடுமைப்படுத்திவைக்கவும் பேசப்படும் பேச்சேயன்றி வேறொன்றுமில்லை. எலிகளைப் பாதுகாக்கப் பூனைக்கு முடிசூட்டுவதும், ஓநாயைக்கொண்டு ஆடுகளைக்காப்பாற்ற முனைவதும் எவ்வளவு பொருத்தமானதோ அதுபோன்றதுதான் இதுவும்.

சமூகத்தில்தான் இந்தக் கோளாறு என்று எண்ணத்தேவையில்லை. மனுநீதி, நீதிமன்றத்திலும் ஹிந்துலா எனும்பெயரால் இந்நாட்டு மக்களின் இடுப்புடையச்செய்துகொண்டிருக்கிறது. இந்த அதிக்கிரமத்தை எடுத்துச் சொல்வதுகூடத் தேசத்துரோகம் எனப்படுகிறது சில தேசபக்தர்களுக்கு. கொடுமை மலிந்ததும்—ஓர் இனத்திற்கே இன்பம் பயப்பதுமான இந்த ஹிந்துலாவில் ஏதாவது மாற்றம்செய்ய மற்றவர் வேண்டினால், வந்துவிடுகிறது பார்ப்பனத் தோழர்களுக்கு முழநீளக் கோபம். "மதம் போச்சு, நாஸ்திகமாச்சு" என ஒப்பாரி வைத்தழ முனைந்துவிடுகிறார்கள்.

முஸ்லீம்மதத்தில் தகப்பனார் சொத்தில் பெண்ணுக்குப் பங்குண்டு. பிடிக்காத கணவனைச்சட்டப்படிநீக்கிவிடவும், கணவன் செத்தால் பங்குபெறவும், அதனைத் தன்னிச்சையாக அனுபவிக்கவும் முஸ்லீம்சட்டம் இடந்தருகிறது.

இந்தியாவிலுள்ள ஒரு சிறு கூட்டத்தினரான பார்சிகளுக்கும் திருமணச்சட்டமும், திருமண உடைப்புச் சட்டமும் இருக்கின்றன. அதன்படி மணத்தை
உடைத்துக்கொள்ளவும், மறுமணம் பு
துகொள்ளவும் உரிமை இருக்கிறது பா
சிப் பெண்களுக்கு.

கூட்டுக் குடும்பமாயுள்ள ஓர் ஹிந்
குடும்பத்தில், கணவனின் சொத்தில்
அவன் மனைவி பங்குபெற முடியாது
அவள் சாகும் வரையில், வேண்டுமான
உண்டிக்கும் உறைவிடத்திற்கும் ஆதா
பெறலாம். தகப்பனார் சொத்தில் ஒ
பெண், தன் கல்யாணச்செலவுக்குப்பொ
ருள் பெறலாம். தனித்த குடும்பமாயின்
அந்தக்குடும்பத்தில் பிறந்த மகனும்,பே
னும் இருக்கும் பெண்களையும் தாயா
விதவையையும் நீக்கிவிட்டுச் சொத்
அனுபவிக்கலாம். இவைகளே சொத்
வகையில் ஹிந்துப் பெண்களுக்கிருக்
உரிமைகள்.

கொண்ட கணவன் கொடு நோ
கொண்டவனாயினும் குணக்கேடனா
னும் வெறியனாயினும். கல்என்றாலும்கண
வன்புல் என்றாலும் புருஷன்' என வா
வேண்டியவர்களே யன்றி, வேதனையி
ருந்து விடுதலைபெற சட்டத்தில் இட
கிடையாது.

ஒரு ஜாதியார்கள் மற்றொரு ஜாதிய
ரோடு மணஞ் செய்துகொள்வது கூடா
தென, இன்றுள்ள ஹிந்துலா தடை
விதித்திருக்கிறது.

மதக்கோட்பாடுகளில்தான் ஹிந்
மதம் ஊழல் நிறைந்தது என்று எண்
வேண்டியதில்லை. ஹிந்துலா, அத்தி
ழத்தன்மையை நிகர்த்ததாக இருக்கு
மாகாணத்திற்கு மாகாணம் மாறுதல்—
சமஸ்தானத்திற்கு சமஸ்தானம் வே
பாடு—ஜாதிக்கு ஜாதி வித்தியாசம்,
விவகாரங்களில் பழக்க வழக்கத்திற்
முன்னால் பணிந்துவிடும் ஹிந்துலா, ஹி
துமதத்தைப் போன்றே ஹிந்துலாவு
வேற்றுமைக்கனிதரும் விஷ விருட்ச

இந்தக் குறைகளில் ஒன்றிரண்டை
நீக்க இந்திய சர்க்கார் சர். B. N. ரா
என்பவரைத் தலைவராகக்கொண்ட ஒ
கமிட்டியை 1941-ல் நியமித்து, ஹிந்
லாவைத் திருத்தஞ் செய்யப் பணித்த
அவர்களும் தங்கள் அறிக்கையைச்சமர்
பித்தனர். நாட்டிலுள்ள அறிஞரின் கரு
தையும் ஆராய்ந்து, அதற்குமேல் இந்
சர்க்கார் 2 மசோதாக்கள் கொண்டு
துளது.

இதனைக் கண்டதும்சங்கராச்சாரிய
சீறுகிறார்! சர்மாக்களும் சாஸ்திரிகளு
சண்டைக்குக் கிளம்பிவிட்டார்கள் க
யின்றி ரத்தமின்றி யுத்தம் புரிய! சில வி
ஷணர்களும் இதில் கலந்துகொண்
ருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோ
இவர்களின் சலசலப்புக்குஇந்தியசர்க்க
செவி சாய்த்தல் கூடாது. உடன்கட்
ஏறும் கொடுமையைத் தொலைக்கச்ச
டஞ் செய்த காலத்திலும், இளமண

(11ம் பக்கம் பார்க்க)

கற்பனைச் சித்திரம்

# 1938-1940.

## ஒரு வசீகர வரலாறு.

பரதன்

**முன்னுரை:—**

வரலாறென்றால், மண்டிலம், மன்னர், போர், என்றுமட்டுமே இருக்கவேண்டு மென்றுசட்டம்உண்டா? இல்லை. ஆகவே 1938-1940 வரை, உள்ள காலத்திலே நடைபெற்ற ஒருகுடும்பவரலாறு, இங்கே பொறிக்கப்பட்டிருக்கிறது, அரசக்குடும்ப மல்ல, குடிபடைதான்!

**ஆதாரம்:-**

இந்தவரலாற்றுக்கு மூலம், ஆதாரம் உண்டா? வரலாறுகளுக்குக் கல்வெட்டு, காவியம், கட்டுக்கதை;, புதைபொருள், என்றுபல ஆதாரங்களைத் துணைகொள்வதுதானே வாடிக்கை, அதுபோல் இந்த பிரத்யேகவரலாற்றுக்கும், மூலம், ஆதாரம்உண்டு. அவை, மூன்று ஏடுகளிலே காணப்படும் சிலவாசகங்கள்.

1. மண்டிக்கடை சொக்கலிங்கம் செட்டியாரின் செலவுப்பட்டிப் புத்தகம்.
2. லேடிடாக்டரின் டைரி.
3. பிறப்புக் கணக்குக்குறிப்பு.

இனிவரலாறு தீட்டப்படுகிறது, படித்துப்பாடம்பெறுக, படமும் காண்க, மனக்கண்கொண்டு.

## 1938.

கண்ணுசாமி, தங்கமானவன், சாது; நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். அவனை நம்பியே கடையின் முழுப்பொறுப்பையும் ஒப்புவித்திருக்கிறேன். காலையில், கண்ணுசாமிதான் கோழியை எழுப்புவான்போலிருக்கிறது! அவ்வளவு விடிய எழுந்திருந்து, குளித்துவிட்டுக் கோபுர தெரிசனம்செய்துவிட்டு, வீட்டிற்கு ஓடி வருகிறான், சாவிக்கொத்து எடுத்துக்கொண்டு, போய், கடையைத்திறந்து வைத்தும், தானேகூட்டிச்சுத்தம்செய்து, நான்உட்காரும் ஆசனத்தைச்சரிப்படுத்தி வைத்திருக்கிறான். அவன் அவ்வளவு அக்கரையோடு வேலைபார்ப்பதால்தான், நான், 8-மணிக்கு எழுந்திருக்கிறேன், நிதானமாகப் பல்விளக்கிக் குளித்துவிட்டு, விநாயககவலைமுடித்துக்கொண்டு, சாவதானமாக டிபன் சாப்பிட்டுவிட்டு, 9, 9-30க்குக் கடைக்கு நிம்மதியாகப்போகமுடிகிறது. கடைவீதியிலே, எத்தனையோ, துண்டுமீசைகளும் துடைகால்களும்இருக்கின்றன! எங்கள் கண்ணுசாமியைப்போன்ற பிள்ளையை கடைவீதியிலேகாணமுடியாது. வளர்த்தவானேன், பலர், அவனை என்மகன் என்றே, அல்லது மிகவும் நெருங்கிய பந்து என்றேகூடக் கருதுகிறார்கள். அவன் என்னமோபாபம், நாயுடுவகுப்பு, நான் சொக்கலிங்கச்செட்டி. பாருங்கள் எப்படியோ அந்தப்பையனுக்கு என் மீது அவ்வளவுவாஞ்சை. அவ்வளவு பிரியம். எனக்கோ ஆண்பிள்ளை இல்லை, ஒரேமகள், அதுவும்விதவை. எனக்குப் பிறகு கடையைக் கண்ணுசாமிதான் அடையவேண்டும். அவனுடைய யோக்யதைக்கும் நடத்தைக்கும் ஆண்டவன் அவனுக்குச் சகாயம்செய்யாமல் இருக்க மாட்டார்.

மண்டிக்கடை வைத்திருந்த சொக்கலிங்கம் செட்டியாரின் டைரியில், இதுபோல்எழுதப்பட்டிருந்தது 1938ம் வருஷக்குறிப்பிலே, என்றேவைத்துக் கொள்ளலாம். ஏன் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்கிறேன் என்றால், உண்மையில் அவர் இதுபோல எழுதி இருக்கவேண்டும், ஆனால் எழுதவில்லை. இவ்வளவு எழுதுவதற்குப்பதிலாக, அவருடைய செலவுப்பட்டியிலே ஒரே வாசகம் குறிக்கப்பட்டிருந்தது,

'கண்ணுசாமிக்கு சம்பளம் 5 ரூபாய் கூட்டப்பட்டிருக்கிறது.';

இந்தவாசகத்தின், முழுப்பொருளில் ஒருபகுதிதான்மேலே தீட்டப்பட்டது! தங்கமானவன், சாது, அக்கரைஉள்ளவன், கடைவேலையைக் கண்ணுங் கருத்துமாகக் கவனித்துக்கொள்கிறான், என்ற எத்தனையோ பாராட்டுரைகளைப் பக்கம் பக்கமாக, மண்டிக்கடை கையேடு பேரேட்டிலே எழுதவாமுடியும்! இவ்வளவும் இதற்கு மேலுங்கூடத்தொக்கிய ஒரு அரிய வசனகவிதான், கண்ணுசாமிக்கு 5 ரூபாய் சம்பளம் கூட்டப்பட்டது, என்ற ஒரே வாசகம். அந்த ஒரேவாசகம், ஒரு குடும்பத்தில் மகிழ்ச்சியை ஒருவினாடியிலே தூண்டிவிட்டது.

1938ம் வருஷடைரியிலே, ஆதிநாராயணநாயுடு, எழுதுவதாகஇருந்தால் என்னென்ன எழுதவேண்டும்தெரியுமோ!

"பகவானே! ஏதோ உன் கிருபாகடாட்சத்தால், நான் சம்பத் குமாரனுகத்தான் பிறந்தேன். என் சக்தியானுசாரம் சேவை செய்தும் வந்தேன். பத்மனுபர் ஆலயத்துக்கு நான் வருஷந்தவருமல் பல்லக்கு உற்சவம் செய்து வந்தால், என்குடும்பச் சொத்து பாழாகிவிட்டது என்று உன்மீது பழி சுமத்தினார்கள். மற்றவர்கள் சுமத்தியது கிடக்கட்டும், எனக்கேகூட சாமியாவது பூதமாவது என்று சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டது. வீடும்வாசலும்போய் வெறும் ஆளானேமே என்று விசாரம் மேலிட்டது. எத்தனையோ கோயிலைச்சுற்றி எவ்வளவோ தானதருமம் செய்து பிறந்தவன் கண்ணுசாமி. அவன், என்காலவித்யாசத்தால், கடையிலே குமாஸ்தா! காலையிலே, நாலோ ஐந்தோ எத்தனை மணிக்கு எழுந்திருப்பானோ தெரியவில்லை, நான் கண்ணைத்திறந்து பார்க்கும்போது, திருநாமம் தரித்துக்கொண்டு திவ்ய தேஜஸோடு இருக்கிறான். தீர்க்காயுசாக இருக்கவேண்டும். பகலும் இரவும் பாடுபட்டுப்பதினைந்து ரூபாய் சம்பாதிக்கிறான், அதிலே பதினைந்துதம்பிடி கூட அவன் எடுத்துக்கொள்வதில்லை. அந்தப்பணத்தை வாங்கும்போதே தனி இன்பம் மீனாட்சிக்கு. அவள் பணத்தைப் பார்க்காதவளா! கத்தை கத்தையாக நான் நோட்டுகளை வீசி எறிவேன், மீனாதான் பெட்டியிலே அவைகளை எடுத்துவைப்பாள், அப்படிப்பணத்தோடு பழகியவள்தான் மீனாட்சி என்றாலும், என்பையன் கொண்டுவரும் 15-ரூபாய் அவளுக்குப் பத்தாயிரமாகத்தோன்றுகிறது, "கண்ணு இன்று சம்பளம் வாங்கிக்கொண்டு வந்தான்" என்று, சிந்துபாடுகிறாள். இருக்கத்தானே செய்யும்! நான் முன்பு அவளிடம் வீசிய நோட்டுகள், என் சம்பாத்தியப் பணமா என்ன அவளுக்குக்களிப்பு பிறக்க? வீடோ தோட்டமோ, நஞ்சையோ நகையோ, எதையோ ஒன்றைவிற்றுச் செலவு செய்துவிட்டதுபோக மிகுந்த பணத்தை மீனாட்சியிடம் கொடுத்திருப்பேன். அவளுக்குச் சந்தோஷம் எப்படி இருக்க முடியும்? கண்ணன்கொண்டுவந்தபதினைந்துரூபாயோ, அவன் பாடுபட்டுச் சம்பாதித்தது. குடும்பத்துக்கு உயிர் ஊட்டுவது! என்னைப்பட்டைநாமத்துடனும்பஜனைப் பாட்டுடனும், பிச்சை எடுக்கச் செய்யாமல் தடுத்த தனம்! கண்ணுசாமியின் குணத்தை அவன் தாயும்நானும்மட்டுமா புகழ்கிறோம். அவன் தீர்க்காயுசுடன் இருந்தால், நான் தோற்றுவிட்ட செல்வமெல்லாம் திரும்பவும் கிடைத்துவிடும் என்று கோபால ஜோதிடர்கூடச்சொல்லியிருக்கிறார். என் மகனுடைய நற்குணத்தைக்கண்டதனாலேதான், அவனுடைய முதலாளி இந்தமாதம்முதல் 5-ரூபாய் சம்பளத்தில் கூட்டி இருக்கிறார். அவர் மகாராஜனாக வாழவேண்டும். இனி அவர் தரும் இருபது ரூபாயிலே மாதம் இரண்டு ரூபாயாவது, கண்ணுசாமியின் கலியாணத்துக்கென்று ஒதுக்கிவைக்க வேண்டும். கண்ணனுக்கு வயது 22 ஆகிறது. இதேவயதிலே, எனக்கு முக்கியமான திவ்ய க்ஷேத்திரங்களிலேஎங்கெங்கே "ரதம்" கிடைக்கும் என்பது தெரியும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஒரு வசீகர வரலாறு.

3-ம் பக்கத் தொடர்ச்சி.

அப்படித் தறுதலையாக இருந்தேன். கண்ணன் ஞானஸ்தன். வீண்வழி போகாதவன். அவனை நீதான் ரட்சிக்கவேண்டும், மேலும் மேலும் விருத்திக்குக் கொண்டுவரவேண்டும். இப்போது,எப்படி, கடைமுதலாளி சொக்கலிங்கம் செட்டியார், கண்ணனிடம் விசுவாசமாக இருக்கிறாரோ அதேபோல என்றைக்கும் இருக்கவேண்டும். அவருக்கும் வியாபாரம்பெருகவேண்டும், இலாபம் வளரவேண்டும். அவருக்குப்பணம் ஏராளமாக இருக்கிறதேயொழிய மனநிம்மதி இல்லை, பாவம், கிளிபோன்ற ஒரே மகள், விதவையாகிவிட்டாள். கல்யாணியை எண்ணிக்கொண்டால், கண்களிலே அவருக்கு நீர் தாரை தாரையாக வழியும் என்று கண்ணு சொல்லியிருக்கிறான். என்ன செய்வது! அது அவரவர் விதிவசம்!—''

இவ்வளவும், ஆதிநாராயணநாயுடு அவசியம் எழுதிஇருக்கவேண்டும், டைரியில், பங்கஜவல்லித் தாயார்கோயிலிலே, கண்ணுசாமி பேரால் ஒருஅர்ச்சனையும், சொக்கலிங்கம் செட்டியார்பேரால் ஒரு அர்ச்சனையும்செய்துவைத்துப் பிரசாதம் பெற்றுக்கொண்டு வந்தார். அந்தஇரண்டு அர்ச்சனைகளிலே, ஏழெட்டு பக்கங்களில் எழுதவேண்டிய குறிப்புக்கு மேலான ஆழ்ந்தகருத்துகள் இருந்தன.

1938ல் கலியாணிக்கு எழுதுவதற்கு ஒன்றும் கிடைக்கவில்லை. தாங்கமுடியாத துக்கத்தை அந்தத்தையல் எப்படி எழுதமுடியும், எழுத்துக்கள் ஏது! பூஇழந்து புலம்பிக்கிடந்தபூவைக்கு, மனதிலேமூண்டிருந்த எரிமலை, நெருப்பைபக்கக்கியபடி இருந்தது. அந்த நிலையிலே, அவள்தன் நெஞ்சில் உற்றது என்னவென்று எங்ஙனம் தொகுத்துஎழுதமுடியும்?ஒருவிநாடி அவள் கண்முன், இந்த உலகம் முழுவதுமே அஞ்ஞானம் குடிகொண்ட ஒரு அக்ரமபுரியாகத் தோன்றும். சிலசமயம் அவள் கண்முன், உலகமே இன்பம்என்ற கணவனை இழந்துவிட்ட விதவைக்கோலத்தில் இருப்பதாகத்தோன்றும். ஆடிப்பாடிச்சுகித்திருக்கும் ஆடவர்பெண்டிர் அனைவரும் நெடுங்கால விரோதம்பூண்டு தன்னைப்பழிதீர்க்கக் கேலிசெய்யும் பாதகர்களாகக் கலியாணியின் கண்களுக்குத் தோன்றினர். எப்படித்தான்பதினெட்டு வயதுப்பெண் கலியாணிக்கு, மணமான மூன்றும் மாதம் மார்வலியால் மணாளன் இறந்துபோன துக்கம்மாறும்? அவள் மனம்பட்டபாடு, எடுத்துக்கூறக் கூடியதன்று, அவளாலும்எழுதிக்காட்டக்கூடியதல்ல. ஓவியக்காரனோ காவியக்காரனோ முயன்றாலும் தோற்றுத்தான் போகவேண்டும், அந்த சோகச்சித்திரத்தைத் தீட்டமுடியாமல். கலியாணி அதிகம் படித்தவளல்ல, பள்ளியிலும்சரி, உலகிலும்சரி!

## 1938

கண்ணுசாமி தங்கக்குணமுடையவன். என்வீட்டுக்காரருடைய விசாரம், அவருக்கு இருந்தவியாபாரத்திறமையைக் கூடக்கெடுத்துவிட்டது. கலியாணி புருஷன் இறந்தான் என்ற தந்திவந்ததும் கதறியதைக்கண்டபோது, அவருடைய மூளையே சிதறிவிடும்போலாகிவிட்டது. என்தலையிலே இந்தப்பேரிடிவிழ நான் யாருக்கு என்ன தீங்குசெய்தேன்! பகவத் கைங்கரியத்தை மறந்தேனோ? தருமம் தவறிநடந்தேனோ? பொய்பேசித் திரிந்தேனோ? என் ஒரேமகள் விதவையானாளே இனிஎனக்குவீடுவாசல் ஏன், மாடுமனை எதற்கு, கடையும் கணக்கும் யாருக்குவேண்டும், பேசாமல் நான் தேசாந்திரியாகிவிடப்போகிறேன், வீடுநமக்குத்திருவாலங்காடு, உண்டுகையில் திருஓடுஎன்ற மொழிப்படி என்றெல்லாம் அவர் அழுதபோது, கண்ணுசாமிதான், ஆறுதல்கூறினான், வீட்டையும் கடையையும் கவனித்துக்கொண்டான். அவனுடைய உதவியும் உபசாரணையும் இல்லாவிட்டால் அவர் உயிர்போய்விட்டிருக்கும். அந்தப்பிள்ளையாண்டானுக்குப்பாவம், எங்கள் குடும்பத்தினிடம் அவ்வளவு அக்கரை. சொந்தப்பிள்ளைகளெல்லாம், குடும்பச்சொத்தைப்பாழாக்கிக்கொண்டு கெட்டுக்கிரை வழியாகின்றன. கண்ணன்,நம் மஜாதியா? குலமா? இல்லை! ஆனாலும், அவனுக்கு எங்கள் குடும்பத்திடம் இருக்கும் அன்பு, எங்கள் உறவின்முறையாருக்குக் கடுகுப் பிரமாணமும்கிடையாது. பொறாமையும் கெட்ட எண்ணமும்கொண்டவர்கள்எங்கள்பந்துக்கள். எதிரில் பேசும்போது தேன் ஒழுகும். தலைமறைவாகவோ தாறுமாறுதான் பேசுவார்கள்.இப்படிப்பட்ட சனியன்கள் நமக்குப்பந்துக்களாம்! கண்ணுசாமியின் கால்தூசுக்குக்கூடச் சமமாகமாட்டார்கள்!! என்று சீதாலெட்சுமி அம்மையார் தமது டைரியிலே எழுதிவைக்கவில்லை, அம்மாவிடம் டைரியும் கிடையாது, டைரிவேண்டுமானால்கூடக் கிடைத்துவிடும், கிடைத்தால் மட்டும் என்ன! சீதாலெட்சுமி அம்மைக்குஎழுதவேதெரியாது. எண்ணம், எழுத்தறிவு இல்லாமலும் ஏற்படுகிறதல்லவா! ஆகவே எழுதாத எண்ணங்களைச் சீதாலெட்சுமி, ஒவ்வோர்நாளும்,

''தம்பீ! போய்விடாதே இதோ ஒரே ஒரு தோசை சாப்பிட்டுவிட்டுப்போ''

''இவ்வளவுகாலையிலே எழுந்திருக்கிறாயேடா கண்ணு, உனக்குஉடம்புக்கு ஜுரம் கிரம் வந்தால் என்னடாப்பா செய்வது''

''பொரிவிளங்காய் உருண்டைகொடுத்தனுப்பினேனே கடைக்கு, நீ சாப்பிட்டாயா,கடைவேலையில்அதைக்கூடமறந்துவிட்டாயா'' என்று ஏதாவது அன்புமொழிபேசுவதன்மூலம், சீதாலெட்சுமி அம்மையார் தமதுடைரியை எழுதிக்கொண்டிருந்தார்.

1938ல் கண்ணுசாமியின்டைரி, சுருக்கமாகவேஇருந்திருக்கவேண்டும். முதலாளிக்கு அடங்கிநடக்கவேண்டும். ஊருக்குப்பயந்துவாழவேண்டும். குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும். கடை வீதியிலே கண்ணியமானவன் என்று பெயரெடுக்கவேண்டும், கண்ணுசாமி ஓதிவந்த நாலடியார் இது. அவனுடைய கண்களுக்கு, முதலாளி சொக்கலிங்கம் செட்டியார், ''பரிதாபத்துக்குரிய, தர்மகுணம்படைத்த, பரமசாது'' வாகத்தெரிந்தார். சீதாலெட்சுமி அம்மையார்., கண்ணுசாமியின் கண்களுக்குத்தாயாகவே இருந்தார்கள். கலியாணியோ? அவளை அவன் சரியாகப் பார்த்ததில்லை. ஆம்! பார்க்காததால்தான் 1938ம் வருஷ டைரியில், இப்படிஇருந்திருக்கவேண்டும் என்று கூறக்கூடிய விதத்திலே விவகாரம் இருந்தது!!

## 1939

1938ல் இருந்த உலகுக்கும் 1939ல் இருந்த உலகுக்கும் எவ்வளவு மாறுதல்! அழிந்த ராஜ்யங்கள்! அரண்மனைவிட்டு வெளியேறிய மன்னர்கள்! உடைந்து போன ஒப்பந்தங்கள்! ஓய்ந்துபோனராஜதந்திரிகள்! தேய்ந்தகனவுகள்! தீய்ந்து போன திருநகர்கள்!—இப்படிப்பலப்பல! பத்திரிகைகள்மூலம் இவைகள் பொது மக்களுக்குத்தெரிவிக்கப்பட்டு, பொது மக்கள், வாழ்க்கையின்தரம் மாறுவதைக் கண்டே, பயங்கரமான போராட்டத்தின் மத்தியிலே நாம் வாழ்கிறோம் ஆகவே வதைகிறோம், என்பதைத்தெரிந்துகொண்டனர். ராஜ்யரசாபாசங்களும், அரசுகளின் அல்லல்களும், பண்டங்கள் பாழாவதும், இவைகளுக்கான காரணங்களும், ஜனங்களுக்குத்தெரியும். அதிலும் சென்னைமக்களுக்குப் பத்திரிகைகளுக்குக் குறைவா! உலகமே,மாலைஐந்துமணிக்குச் சென்னை மக்களின்கண்முன் வந்துநின்றுவிடுகிறது. அந்தக்கைங்கரியத்தைச்செய்யத்தான் ஆசிரியர்கள் இருக்கிறார்களே! சென்னைமக்கள் உலகநிலையைத்தெரிந்துகொள்ளும் வேலையிலே மூழ்கியிருந்தபோது, மண்டி சொக்கலிங்கம் செட்டியாரின் 1939ம் ஆண்டுக்குறிப்பவட்டைப் பற்றியா அக்கரைகொள்வார்கள்? ஆனால் மக்கள் மனதிலே உலகநிலைகண்டு மருட்சி ஏற்பட்டதற்கு எள்ளளவும்குறைந்ததல்ல, சொக்கலிங்கம் செட்டியாருக்குக்கண்ணுசாமியின் நடவடிக்கையிலே ஏற்பட்ட மாறுதலைக்கண்டு உண்டான மருட்சி. அவன், பீரங்கிதுப்பாக்கி தூக்கிக்கொண்டு செட்டியாரின் சித்தத்தைச்சிதைக்கவில்லை. அவனுடைய படையெடுப்புமுறையே ''சத்தியின்றி இரத்தமின்றி'' இருந்தது. கண் இருக்கக் கட்கம்தேடுவார் உண்டா, காதற்போரில்? அதிலும், கல்யாணி குருடல்ல! கண்ணுசாமி குறள் அறியாதவன்! குறளாசிரியரோ எவ்வளவோ கல்யாணிகளையும் எத்தனையோ கண்ணுசாமிகளையும் பார்த்தபிறகுதானே,

9-ம் பக்கம் பார்க்க.

# வெண்ணிலாவும் வானும்போலே!

வெண்ணிலாவும் வானும் போலே! வண்ணமலரும் மணமும்போலே! காஞ்சி திராவிடர் கழகத்தார் நடத்திக்கொடுத்த இசைவிழா, ரசிகர்களின் உள்ளத்துக்கு மிக்க இன்பமூட்டுவதாக இருந்தது. தமிழ்ப் பூஞ்சாலிலே, உயர்பீடத்திலேவீற்றிருந்து பண்பாடிமகிழ்விக்கும் இசைவாணர்களை 4-1-45லிருந்து 9-1-45வரை, ஆறுநாட்கள், காஞ்சிபுரத்திற்குவரவழைத்து, அவர்களின் இசைவிருந்தை மக்கள் உண்டுகளிக்க உதவிசெய்தனர், காஞ்சி திராவிடர் கழகத்தலைவர் தோழர் கே. எஸ். முனுசாமி அவர்களும் செயலாளர் தோழர் டி. பி. எஸ் பொன்னப்பனும், இவ்விருதலைவர்களுக்கும் உதவியாக, பிரபல வியாபாரிகளான, தோழர்கள் ஆபீசா, தங்கவேல்முதலியார், புட்டாசாமி, சி.வி. எம். அண்ணாமலை, சி. வி. ஏகாம்பரம், ஆகியவர்கள் இருந்தனர். சுயமரியாதை உலகுக்குள் வருமுன்னரேயே இசைவாணர்களை நண்பர்களாகப் பெற்றிருந்த, பெருமை தோழர் டி. பி. எஸ். பொன்னப்பனுருடையது. செயலாளரின் திட்டத்தைத்திறம்பட நடத்தித்தரும் பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றிய பெருமை, திராவிடர் கழகத்தலைவர் தோழர் கே. எஸ். முனுசாமி அவர்களுக்கு உரித்தாகஇருந்தது. இவர்களின்ஊக்கமென்ற சுருதியுடன் இசைவிழா, 4-1-45 மாலை ஆரம்பமாகி மனோரம்மியமாக 9-1-45 இரவு 10 மணிக்குமேல் முடிவுற்றது. இடையே இருந்த ஆறுநாட்களும் இசைவிருந்து கொட்டகையில் ஆயிரக்கணக்கானமக்களுக்கு. அன்புவிருந்து திராவிடர்கழகக்கட்டிடத்திலே இசைவாணர்களுக்கு. ஆறுநாட்களில் பதின்மூன்றுகச்சேரிகள், 9 பாட்டுக்கச்சேரிகள். மூன்றுமுறை நாதஸ்வரம்! ஒருமுறைகுழல்! இம்முறையில் காஞ்சிபுரத்தில் இதுவரை (காலஞ்சென்ற நாயனாப்பிள்ளை காலத்துக்குப்பிறகு) நடந்ததில்லை என்றுகூறலாம், அவ்வளவுஅமைப்பாக இருந்தது. மதுரமான தமிழ் இசைமழையைத்தமிழ் இசை இயக்கம் தோன்றுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்பிருந்தே பெய்துவந்த, மதுரை மாரியப்ப சுவாமிகள் எனும் இசைவாணர் இனிமையைப் பொழிந்தார். அவர் இசைவாணர்மட்டுமல்ல இசைகர்த்தாவுங்கூட. அவருடைய கீர்த்தனங்கள் பெரும்பாலும், அவரே இயற்றியவை. 'சாதாரணமாகத்தியாகர் கீர்த்தனங்களில்பாடாந்திர விசேஷம்உண்டு, தமிழ்ப்பாட்டிலே அதனைக்காணமுடியாதே" என்று சில்ர்வாதிடுவர், அவர்களுக்கு மதுரை மாரியப்பா தமது இசை மூலம் இனிமையான பதிலுரைத்தார்.

அன்றிரவு திருவாவடுதுறை ஆதீனவித்வான் தோழர் நடராஜசுந்திரம் (கக்காயி) தமது நாதஸ்வரக்கச்சேரியை, தோழர்கள் மீனாட்சிசுந்தரம், சண்முகசுந்தரம் ஆகிய இருவரின் தவிலுடன், நடத்தினர். அன்று அவருடைய "தோடி" ஆலாபனமும் இராகமாலிகையும் ரசிகர்களைப் பலமுறை "சபாஷ்" கூறவைத்தது. ஸ்வரத்தை நாதமாக்கும் சிரமமான காரியத்தைச் சுவைமிகுந்திடச்செய்வது, நாதஸ்வரம். அந்த அபூர்வத்திறமையுடன் கக்காயி அவர்கள் அன்று, தமதுகச்சேரியைநடத்தினர்.

சௌராஷ்டிராவில் ஒருகிருதியும், கல்யாணியில் ஒரு உருப்படியும் வாசித்து, மக்களை மகிழ்வித்தார்.

5-1-45மாலை, தஞ்சை கௌரிலட்சுமி சகோதரிகளின் இசை. நடைபெற்றது. பழையகிருதிகளையும் புதியதமிழ்உருப்படிகளையும், சகோதரிகள், இனிமையும் வித்வத்திறமையும் விளங்கும்படிபாடிச்சபையைமகிழ்வித்தனர்.

இரவு இசை அரங்கிலே கெம்பீரமாக வந்தமர்ந்தார், திருப்பாம்பரம் சாமிநாதப்பிள்ளை அவர்கள் குழலுடன், மாயவரம் தோழர் கோவிந்தராஜப் பிள்ளை அவர்கள் மலர்ந்த முகத்துடன் வந்தமர்ந்தார், சாமிநாதப்பிள்ளை அவர்களுக்குப் பக்கவாத்யம் வாசிப்பது என்றால் அகமகிழ்ச்சி ஏற்படுவதும், அதன்பயனாக முகமலர்ச்சி உண்டாவதும்சகஜந்தானே, அன்றைய ஜமாவைக்கண்டதுமேமக்கள் களிப்பெய்தினர் முக்கனிச்சாறுகிடைக்கப்போகிறது என்று முன்கூட்டியேதெரிந்துகொண்டதால். குழல்சாமிநாதரும், பிடிலுக்குக் கோவிந்தராஜனும், மிருதங்கத்துக்குக் குற்றாலம் சிவவடிவேலும் கூடினால் இசை இனிமை இன்பம் இருந்துதானேதீரும். அன்று திருப்பாம்பரம் சாமிநாதரின் குழலோசையைக் கேட்டவர்கள், செவியிலே பாய்ந்த இன்பம், கொஞ்சநஞ்சமல்ல. அபூர்வராகங்களிலே கிருதிகளை எடுத்து, அனாயாசமாக, பல வித்வான்கள் புகப்பயப்படும் இடங்களிலே அழகாகச் சஞ்சாரம் செய்து, இராகபாவத்தைச் சொரிந்தார் குழல் மூலம் அன்று. பூஷாவணி, கீர்வாணி,. பஞ்சனதீசா முதலிய இராகங்களிலே, கிருதிகளை வாசித்துக்காட்டி, அந்த விருந்துச் சுவையிலே சொக்கிக்கிடந்த ரசிகருக்கு சங்கராபரண இராகத்தை வாரி வாரி ஊட்டினார். அவருடைய குழலுக்கு, வேறுயார் பக்கவாத்தியம் வாசிக்கமுடியும் என்று கேட்பதுபோலிருந்தது பிடிலும் மிருதங்கமும் அவர்களின் வாசிப்பின் திறமையைக்கண்டு, சாமிநாதப்பிள்ளை அவர்களே மிகவும் ரசித்தார். சுகபாவம் அன்றைய கச்சேரியில் உச்சஸ்தானத்துக்குச்சென்றது. காகரப்பிரியாவிலே அன்று அவர், "மாயவித்தை செய்கின்றனே"என்றஉருப்படியை வாசித்தார். அன்று, அவருடைய குழலின் இனிமையிலும், வித்வத்திறத்திலும், அனுபவசத்திலும் இலயித்தவர்கள், ஒருசிறுகுழல், அதிலே சில துவாரம், இதைவைத்துக்கொண்டு, அவர் எவ்வளவு மாயவித்தைகள் காட்டுகிறார், மதுரத்தை வாரி வீசுகிறார், என்றுமகிழ்ந்துகூறினர். ஏன், திருப்பாம்பரத்தாரின் குழலோசையின் இனிமையைத்தமிழகம் அடிக்கடிகேட்டு இன்புறுமாறு செய்யக்கூடாது என்ற கேள்வியும், அவர் சாமிநாதப்பிள்ளைதானே, சாமிநாத சர்மாவாக இருந்தால் சர்வசதாகாலம் அவருக்குச சான்சுகள் இருக்கும், என்றபதிலும் ஒரு ஆளைக்காட்டட்டுமே பார்ப்போம் இவருக்கு ஈடாக அக்ரகாரத்திலே என்ற எழுச்சிக் குரலும், சபையிலே பல இடங்களிலே கேட்டது. மக்களின் உள்ளத்தை அக்குழலோசை மெல்லமெல்லச் சென்று இன்பமாகத்தடவியபடி இருந்தது. 6—1—45 மாலை இசைவிழா தோழர் ரங்கசாமி அவர்களின் இசையுடன் துவங்கிற்று. அன்றிரவு, இசை அரங்கு, மீண்டும் நாயனாப்பிள்ளையின் நாட்களை நினைவூட்டும் விதமாக மாறிவிட்டது. சாட்டியக்குடி மீனாட்சிசந்தரம் அம்மையாரின்இசையும், மிருதங்கம், ரங்கநாயகி அம்மையின் அதிர்வேட்டுகளும், மாதர் தம்மைஇழிவுசெய்யும் மடமையை இடிஇடியென்றுஇடித்துத்தவிடுபொடியாக்கிற்று. அன்றைய "ஜமாவிலே" வெறும் நகாசுவேலைகள், இந்திட்யூன்கள், இவைகளுக்கு இடம்கிடையாது. நாயனாப்பிள்ளை காலத்துப் பாணி, குரலின் இனிமையைத் துணைகொண்டு, ஆளைமயக்கி விட்டு, "அப்ளாஸ்" வாங்கும்பாட்டல்ல. பாடஅனுபவம், பயிற்சிவிசேஷம், சாதகபலம், ரசபாவம், முதலிய அம்சங்களுடன் இராகபாவதாளம் இசைந்திருந்தது. பைரவி. ஸ்ரீரஞ்சனி, இராகங்களிலே, அனுபவமும் ரசமும் கலந்த ஆலாபனம் செய்துவிட்டு, அழுத்தமும் அழகும் விளங்கும்படி உருப்படிகளைப்பாடி, வித்வத்துவத்தை விமரிசையாக விளக்கினர் அம்மையார். புதுக்கோட்டை மிருதங்கபூஷணியார் சபையினர் ஆச்சரியப்படும்படியாக வாசித்தார். மிருதங்கங்களிலே இரண்டு வகை

(8ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 14—1—45 ஞாயிறு


## பொங்குக இன்பம்.

பொங்கற்புதுநாள்பிறந்தது, செந்தமிழர்முகமெலாம்மலர்ந்தது, புனலாடிப்புதுஆடை அணிந்துமுத்தெனக்குவிந்திருக்கும் புத்தரிசிகொண்டு பொங்கித்தின்று, தமிழகம் களிப்புடன் காட்சிதரும் இந்நன்னாள், நமது "வாசகர்கட்கு" நாம், பொங்குக இன்பம்! தங்குக எங்கும்! வாழ்வுவளமாகுக! வேளாண்மை ஓங்குக! துயர் ஒழிக! தூய்மை ஓங்குக! இடர் ஒழிக! இல்லாமை அழிக! உரிமை பொங்குக! என்று உளம்நிறைந்த அன்புடன் கூறி, நமது பொங்கற்படையலைச்சமர்ப்பிக்கிறோம். உழுது விதைதூவிப், பயிர்கண்டுமகிழ்ந்து, களைகண்டுஎடுத்து, நீர்பாய்ச்சிநின்று, கதிர்முற்றக்கண்டு களிகொண்டு, சாய்ந்திடும் செந்நெல்லை, அறுத்துமிதித்துக் குவித்தெடுப்பதிலுள்ள ஆனந்தம், அந்நாள்தொட்டு இன்றுவரை, இங்குபோல்எங்கும், உண்டு. அறுவடை விழாவாம் இப்பொங்கற்புதுநாளன்று, அகத்தினழகு முகத்திலுறத் தம் இல்லங்களிலே அமர்ந்திருக்கும் அன்பர்களுக்கெல்லாம் நாம் நமது நன்மொழியை நல்லெண்ணமெனும் நறுந்தேனுடன் கலந்துதருகிறோம், இன்பம் பொங்குக! இன்றுபோல்என்றும்! என்று கூறுகிறோம்.

அறுவடை விழாதரும்அறுசுவைஉண்டியும், அழகு அணியும், தூய ஆடையும், அவைதரும் அகமகிழ்வால் வளரும் அன்பும், அருளும் ஆர்வமும், இன்பமும் ஈகையும், உவகையும் ஊக்கமும் போற்றி வரவேற்கத்தக்கதே. பொன்னும்மணியும் கொழிக்கும் நன்னாட்டிலே பிறந்தோம், வாழ்வின் பயனை நுகர்ந்தோம் என்று களிகொள்ளத்தான் வேண்டும். எரிமலையும் சுடுமணலும், நெடுங்காடும் பெருவெள்ளமும், வரண்ட நிலமும் வளமற்ற நீர்நிலையமும் படைத்த இடமாக இன்றி, நஞ்சையும் புஞ்சையும்,நடுநடுவே நறுமணப்பூங்காவும், பழமுதிர்ச் சோலையும், பாங்குடன் விளங்கும் குன்றும் மலையும், மலைபடுபொருளும், மக்களின் தேவைக்கேற்றவைகளை நல்கும் கனிகளும், சிந்துபாடும் சிற்றாறும், வள்ளல்போல் தரும் ஆறுகளும்பிறவும்கொண்டு,பொன்னாடாக விளங்கும் இந்நாடு நம் நாடு என்று கூறிக்கொள்வதிலே ஓர்பூரிப்பும் பெருமையும் நமக்கிருப்பது இயல்பே; இருத்தலும் அவசியமே. ஆனால், இத்தகைய நாட்டிலே உள்ள நலிவுகளையும் நாம் மறத்தலாகாது. தீட்டிய வைரம் போல், தணலில் வெந்து கைத்திறனால் உயிர்பெறும் தங்கம்போல், அரைத்தெடுத்த சந்தனம்போல், நலிவுநீக்கப்பெற்று, அயர்வு போக்கப்பெற்று, ஆற்றல் வளப்படுத்தப்பெற்ற நாடும், அழகுடன் விளங்கும், ஆங்குஅறிவுமணம் கமழும், இன்பவிழா என்றென்றும் இருக்கும்.

எங்கு வீணர்தொகை குறைந்து வீரர்தொகை அதிகரித்துளதோ அங்குவிழா நித்தமும்! எவ்விடத்தில்மடைமைமாய்ந்தொழிந்துமதிமிகுந்திருக்கிறதோ அங்குதிக்குக்குறைவில்லை, நாட்டின்கதியாதோ என்ற சிந்தனைக்கு வேலையில்லை. வரம்புகட்டியவயலும், வாய்க்கால் தொகுப்பும், நீர்நிலை அமைப்பும், இவைகளை நேரிய முறையிலே வைத்திருக்கும் நோக்கமும் எங்குளதோ,அங்கு, வாழ்க்கை பூஞ்சோலையாகத்தான் இருக்கும்.பழைமைப்புழு நெளிந்துகொண்டு, வைதிகவல்லூறுகள் அவைகளை உண்டுகொழுத்து ஊர்சுற்றிக்கொண்டிருந்தால் ஆங்கு வாட்டவருத்தமும், இடரும் இடியும், பேதமும்பீடையும் பெருகிப்பாழ்படுத்தும். உழவன் அறிவான், பண்புக்கேற்றபயிரும், பருவகால மழையும், தருணமறிந்து பாய்ச்சிடும்தண்ணீரும், களைபறித்தலும், பிறகு சிறுமணியாகக்குவிந்து பெருநில மன்னருக்கும் பேரானந்தம்தரும் என்பதை. அவனுடைய ஏரடிக்கும் சிறுகோலின் திறமே செங்கோலுக்குற்றதுணை என்பதைத்தெரிவான். அவனுடைய மேனிகருத்திடக் கருத்திடநாட்டுமக்களின் முகம் ஒளிவிடும்என்பதை அறிவான். அதுவே, அறுவடைவிழா அளிக்கும்அறிவுப்பொங்கல்! அறுவடை விழாதரும் அரியபாடம், உற்றகாலத்திலேஉரியமுறைகொண்டு உழைத்தால் பெற்றிடலாம் பெருமகிழ்வுஎன்பதேயாகும். இந்தப்பாடம், சிறுவயல்காட்டும் பெருமதி, மணிவிளைவிக்கும் நிலத்தளவோடு நிற்கும்திறத்ததன்று, மாநிலமெங்குமே இதனைமதிவழிஎனக்கொளல் முறை. எனவே பொங்கற் புதுநாளன்று பொலிவுடன்இருக்க உரிமை பெற்ற பொன்னாடு, ஆரியமெனும்நலிவு இன்னமும் நீங்கப்பெற்று, உரிமை ஒளியுடன் விளங்கவில்லைஎன்பதைநினைவில்நிறுத்தி, நிறுத்தியதன்பயனாக நீண்டதோர்பெருமூச்சுவிடாமல்நிமிர்ந்துநின்று "நீள்வையம்எதிர்த்திடினும் அஞ்சுதல் இல்லாத்தோள்வாய்ந்தவர் நாம்" என்பதைஎண்ணித்துணிவுபெற்றுத், துயர்அறுப்பேன், தொல்லைதருபவரின் தாள் பணியேன், நாமார்க்குங்குடியல்லோம், என்றுஉறுதிகொண்டு, அந்தஉறுதிதரும் ஊக்கத்துடன்பணிபுரிந்து, அடுத்தஅறுவடைவிழா வருமுன், எந்தஅளவுஉங்களால் ஆரியக்களையை அகற்றமுடியுமோ, அந்தஅளவு செய்து, தமிழ்க்கழனியிலே, இன்பம்விளையும்படிச்செய்ய வேண்டுகிறோம். அந்த ஆற்றலை இன்றைய ஆனந்தவிழா உமக்கு அளிக்குமாக!

:(o):

## வெண்ணிலாவும் வானும்போலே!

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தென்றல்போன்ற ஏற்றம்இறக்கம், சிற்றாற்றின் சிந்துபோன்ற நாதங்கள், சர்க்கஸ் வித்தைக்காரன், உயர்ந்தகம்பத்தின்மேல் ஏறிக்கொண்டு ஒற்றைக்காலிலே நிற்பதும், அதிலேஇருந்து கர்ணம்செய்வதும், போல, எந்தநாதஸ்வரக்காரரும்எட்டாத இடங்களிலே தாவிச்சென்று, மற்றவர்களைக்கூவி அழைத்து, ஏறுநடை நடந்துகாட்டி, அந்த உயரத்திலிருந்து இமைப்பதற்குள் கீழேபாய்ந்து, மீண்டும் மேலே பறந்துசென்று,கொண்டிருந்த நேர்த்தியை அவரிடம்தவிரவேறுயாரிடம்பெறமுடியும்! டி. என். ஆர். க்குப் பக்க நாயனமாகஅன்று தோழர் பிச்சப்பா ரம்மியமாகவாசித்தார். தவுல் ராகவன், சங்கரன், இருவரும், தங்கள்'வேலைகளை' வெகுஜோரான முறையிலேகாட்டி ரசிகர்களுக்கு விருந்தூட்டினர்.

அந்த இன்பப்பொழிலின் இனிமையிலே இலயித்திருந்த ரசிகர்களை 9-1-45, மாலை இசைஅரசு தண்டபாணி தேசிகர், தமது இனிமைக்குரலில் அழைத்தார், "வாரீர், பருகிட இசைதருவேன் சேரீர்" என்று. தேசிகர் இசைஅன்றால், தேன் இனிக்கும் என்பது எப்படிவிளக்கப்பட வேண்டியதில்லையோ அப்படிப்பட்டது. "துன்பம் நேர்கையில்" என்ற பாரதிதாசன்பாட்டை மிக நேர்த்தியாக அன்று தேசிகர்பாடினார். தியாகர் கிருதிகளில் இரண்டுபாடினார்,விரும்பினால்நானும்அரியக்குடி செம்மங்குடி முதலிய ஊரார் போலிருக்கமுடியும்; ஆனாலும் தமிழிசையைத்தான் பெரிதும் நான் வழங்குகிறேன், தமிழனாதலால்! என்று இடித்துக் கூறுவதுபோலிருந்தது கிருதிகளை அவர் பாடும்போது. காம்போதி, சண்முகப்பிரியா, சாவேரி, பிலஹரி, சிந்துபைரவி, ஆகிய இராகங்களைப்பட்டைதீட்டப்பட்டவைரங்கள்போலஜொலிக்கச்செய்தார் விருத்தத்திலே, அந்திநேரத்தில், செவ்விளநீர் அருந்திவிட்டு, தென்றல்வீச, தேன்மொழியாள் மடிமீது சாய்ந்திருக்க, உதயச்சந்திரனைக்கண்டு, அதன்தேஜசுக்கும் அவள்வதனத்துக்கும்உள்ளஉவமைகண்டு உள்ளத்தில் களிப்புறும், திருப்திபெற்ற காதலனின்நிலையைத் தேசிகரின் இசை, ரசிகர்களுக்குத் தருகிறது, எங்கும், என்றும்!

தேசிகரின் தேன்பிரவாகத்துடன், இசைவிழா இனிதுமுடிவுற்றது. திராவிடர்கழக விளம்பரச்செயலாளர் தோழர் சி. வி- எம். அண்ணாமலை, இசைவிழாவைத் திறம்பட நடத்திக்கொடுத்த தோழர்கள் கே. எஸ். முனுசாமி டி. பி. எஸ். பொன்னப்பா ஆகிய இருவருக்கும் மாலைசூட்டிப்பாராட்டுரை வழங்கினர். இசைவாணர்களுக்கும், விழாவில் ஒத்துழைத்தவர்களுக்கும் தோழர் K. S. முனுசாமி அவர்கள் நன்றிகூறினர்.

## ஒரு வசீகர வரலாறு.

10ம் பக்கத் தொடர்ச்சி.

சொல்லு. கண்ணுசாமியைக் கலியாணம் செய்துகொள்வது என்றால் உனக்குக் களிப்புதானே? ஒளிக்காமல்பேசு! இஷ்டம்தானே?" என்று மனதிலே கிளம்பும் கேள்விக்குக் கலியாணி "ஆமாம்" என்ற பதிலை அளிப்பாள், அதைஅந்தத்தாய், கொசகடிக்கிறதா என்றுகேட்டகேள்விக்குக் குமரிகூறிய பதில்என்று எண்ணிக்கொண்டு போய்விட்டாள்படுக்க!

கனியை அந்தக்கட்டழகியின் கரத்திலே தந்த கண்ணுசாமி தன்னையும் மறந்தவனாய், அவள்கரத்தைத்தொட்டு இழுத்துவிட்டான்.

"ரொம்ப நல்லாயிருக்கு யோக்யதை!' என்று அந்தச் சிற்றிடையாள் சீறினாள், கண்ணுசாமி, "தெரியாத்தனமாகச்செய்துவிட்டேன், கோபிக்கவேண்டாம்இனி. மேல்..........." என்றுகுளறிக்கொண்டிருக்கும்போதே, கலியாணி கூடத்து அறைக்குள் சென்றுவிட்டாள், கண்களிலே ததும்பிய நீரைத்துடைத்துக்கொள்ள. மிரண்ட பார்வையுடன்,நடந்துசென்றான் கண்ணுசாமி வெளியே, தடுமாற்றம், தலை இறக்கம், தவிப்பு இவ்வளவும் அவனைத்தாக்கின. தகர்ந்ததா அவன் ஆசை! இல்லை! பதுங்கிற்று,பாய்வதற்கு. பாயவும் செய்தது மற்றோர்நாள். அன்று நிலைமை, கோழைக்குக்கூடத் தைரியம் கொடுக்கக்கூடியதாக இருந்தது. செட்டியார், கடையிலே அதிக வேலையிலே ஈடுபட்டிருந்தார். செட்டியாரின் சம்சாரமோ, சொந்தக்காரர் வீட்டிலே திடீரென்று ஏற்பட்ட ஒரு சாவுச் சடங்குக்குச் செல்லவேண்டி நேரிட்டது. கலியாணி அன்று கட்டிக்கொண்டிருந்த சேலை நீலநிறம்! கண்ணுசாமி கவியல்ல, ஆனால் அந்த நீலநிறச் சேலைக்கும், நிலவை ஒத்த முகத்துக்கும், நட்சத்திரங்கள் போல் ஜொலித்த கண்களுக்கும், மிக அருமையான பொருத்தம் இருக்கக்கண்டான். நிர்மலமான நீலநிற வானத்திலே முழுநிலவு காட்சி தருவதுபோலிருந்தது, அன்று நீலநிறச்சேலையைக்கட்டிக்கொண்டுகலியாணி வீட்டிலே இருந்த சாயை, ஒருமுறை தொட்டுவிட்டுத் தீயால் தாக்குண்டவனாதலால் கலியாணியைக் கண்டதும் கொஞ்சம் கலக்கம் ஏற்பட்டது, அதைக்கண்டதும் அவளுக்கே சிரிப்பு உண்டாயிற்று! கேலியாகச் சிரித்தபடி, "வா! கண்ணுசாமி! கைகாரன்நீ!" என்று வரவேற்றாள். அந்தச் சிரிப்பு, கண்ணுசாமிக்கு டானிக்காகிவிட்டது. அருகே சென்றான், அவள் கொஞ்சம்அஞ்சிஒதுங்கினாள். "அடடா! சமயற்கட்டுக்குள் பூனை......" என்று கூறினான். எங்கே?என்று கேட்டுக்கொண்டே சமயற்கட்டுப்பக்கம் கலியாணி திரும்பினாள், கண்ணுசாமி எங்கிருந்தோ தைரியத்தை அமோகமாக வரவழைத்துக்கொண்டு, கலியாணியை அப்படியே அணைத்துக் கொண்டான். கன்னத்திலே கன்னம்! பிறகு உதடுகளுடன் உதடு! ஆனந்த அணைப்பு! அமிர்தரசம்போன்ற முத்தமழை! இவ்வளவும் மின்சார வேகத்தில்! கலியாணியின் கண்கள் மூடிக்கொண்டிருக்கையில்! கண்ணுசாமியின் உடல் ஒரே ஆட்டம், பயத்தால்! மிகக்கஷ்டத்துடன் தன்னை அந்த அணைப்பிலிருந்து விடுவித்துக்கொண்டு, இதென்ன சனியன்! யாராவது பார்த்தால் என்ன ஆகும்?" என்று கோபம் கொஞ்சம், பயம்பாதி பாகத்துக்குமேல், மற்றப்பகுதி பெண்களுக்கே சொந்தமான அந்த சாகசம், ஆகிய கூட்டுக்கலவைக்குரலிலே, கேட்டாள் கலியாணி.

அடுத்த கட்டத்தின்போது "அம்மா! வந்துவிடுவாங்க, விடுங்க! கண்ணில்லே! அதோ சத்தம் கேட்குது" என்று கூடத்திலே, கொஞ்சுவாள், கண்ணுசாமியின் காதிலே சிக்கிக்கொண்டு, "சும்மா இரு கண்ணு! சமயல்கட்டிலே இருந்து அவங்க வருவதற்குள்ளே இன்னும் ஒரே ஒரு.........."என்று கண்ணுசாமி கொஞ்சுவான், காதலர்கள், முத்தங்களைக்கணக்கெண்ணும்போதுதான் தவறுமே! பத்து ஐந்தாகும், பதினைந்து ஒன்பது ஆகும்! கூடத்திலே வாலிபவிருந்து தயாராகும், சமயற்கட்டிலே, சீதாலெட்சுமி அம்மையார், குழம்புக்குக் காரமும் உப்பும் சரியாக இருக்கிறதா என்ற சத்தற்ற (ஆனால் தேவையான) கணக்கிலே ஈடுபட்டுக் கிடப்பார்கள்.

1938-ல் தங்கக்கம்பியாக இருந்தவனை 39ல் தடிக்கழுதையாக்கி, 39 முடிவதற்குள், கண்ணுசாமியைக்கடையைவிட்டே நிறுத்திவிட்டு கலியாணியின்மீது செட்டியார் தமது சீற்றத்தை ஏவினார்-எலி ஓடிவந்தால்கூடப்பயப்படும் சுபாவமுடைய கலியாணிக்கு எங்கிருந்துதான், அந்தத் தைரியம்பிறந்ததோ தெரியவில்லை.

"நடந்தது நடந்துவிட்டது. என்னை வேண்டுமானால் கொன்றுபோட்டுவிட்டு நீங்கள் சுகமாகவாழுங்கள். உங்கள் கௌரவம் நிலைக்கவேண்டுமல்லவா! என்யௌவனம் பாழாவதைப்பற்றிக் கவலைவேண்டாம். என்னைக்கொன்றுவிடு, அப்பா, குலம், குடும்பும், கௌரவம் இவற்றுக்கு ஆபத்துஇராது, ஒரு மங்கை சாவாள், ஒருசிசுவும் கருவிலேயேசாகும். ஸ்திரிஹத்திசிசுஹத்தி மகாபாதகம்என்று பயப்படவேண்டாம்! விதவைகளைக்கொடுமை செய்துபழக்கப்பட்ட இந்ததர்மவான்களுக்கு இந்தப்பாதகங்கள், பழயசோறு. பயப்படவேண்டாம்" என்று சொன்னாள் கலியாணி.

கலியாணி கர்ப்பவதியாமே! என்று கூறித் தலையிலே அறைந்துகொண்டார் செட்டியார். கலியாணி, கண்ணுசாமி கடையைவிட்டு நிறுத்தப்பட்ட பத்து நாட்களிலே,அவனுடன், வெளியூர் சென்றுவிட்டாள். "ஓடிவிட்டாள்! ஓடிவிட்டாள்! கடைக்காரப் பையனுடன் கலியாணி ஓடிவிட்டாள்" என்று ஊரிலே பேசிக்கொண்டனர். 1940ல், கண்ணுசாமி டைரிஎழுதியிருந்தால்,

"என் இன்பவல்லியும் நானும்சுகமாக இருக்கிறோம். இந்தக்காஞ்சிபுரத்துக்கு வந்து கடைவைத்ததிலிருந்து, எனக்கு வருமானத்துக்கும் குறைவில்லை. என் அன்பான மனைவிக்கு, சுகப்பிரசவம்! லேடிடாக்டர் அக்கரையோடு, பிரசவகாரியத்தைக்கவனித்தார்கள்.என்மகனுக்கு ஆதிலிங்கம் என்று இரண்டுதாத்தாக்களின் பெயரைக்கூட்டிப்பெயரிடத்தீர்மானித்திருக்கிறேன்." என்று எழுதியிருப்பான். ஆனால் டைரி ஏது, பலசரக்குக் கடை கண்ணுசாமிக்கு! லேடிடாக்டரின் டைரியில், காணப்பட்டகுறிப்புஇதனைத் தெரிவித்தது.

குழந்தை:-ஆண்.
நிலைமை:-ஆரோக்யமாக அழகாக இருக்கிறது.
தகப்பனர் பெயர்:-கண்ணுசாமி
தொழில்:-வியாபாரம்
தாயார் பெயர்:-கலியாணி

கண்ணுசாமி டைரியிலே எழுதியிருக்கவேண்டியதை, வேறுமொழியிலே லேடிடாக்டரின் டைரி எடுத்துக்காட்டிற்று. நகரசபை ஜனனமரணப்பதிவாளரின்புத்தகத்திலும்.

குழந்தை ஆண்:-பெயர் ஆதிலிங்கம்:-தகப்பனர் பெயர் கண்ணுசாமி: தாயார் பெயர்: கலியாணி—என்ற குறிப்பு பதிவாகிவிட்டது.

———:●:———

## கோவையில் சீர்திருத்தத் திருமணம்.

கோவை தோழர் எ. கிருஷ்ணசாமி செட்டியார் புதல்வி தோழியர் கே.இந்திராணிக்கும் எஸ். முனியப்பசெட்டியார் புதல்வன் தோழர் எம். துரைசாமிக்கும், அவனுசிரோடு "பிரசிடெண்டு" பங்களாவில் 19—1—45 தேதிவெள்ளிக்கிழமை காலை 7-மணிக்கு சீர்திருத்தத் திருமணம் நடைபெறும். பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்.

## பாரதியார் நாவலரானர்.

30, 31-12-44ம் நாட்களில் யாழ்ப்பாண நல்லூரில்,நகரபரிபாலனப்பொது மாளிகையில் ஈழைநாட்டுத் தமிழ்ப் புலவர் மன்றத்தின் முதலாண்டு நிறைவு விழா நடந்தசமயம் தமிழ்ப்பேராசிரியரும், வழக்கறிஞருமான திரு S. சோமசுந்தரபாரதியாருக்கு "நாவலர்" என்ற தலைசிறந்தபட்டம் வழங்கியதோடு ஒரு செப்புப்பட்டயமும் ஆவணமும் அளிக்கப்பட்டது.

## வெண்ணிலாவும் வானும்போலே!

5-ம் பக்கத் தொடர்ச்சி.

யினர் உண்டல்லவா, பெரும்பாலானவர்கள் மிருதங்கத்தை அடிக்கிருர்கள், அடி தாங்கமாட்டாமல் அக்கருவி அலறுகி றது. அந்த அலறலைக்கேட்டுச் சபையினர் பரிதாபப்படுகின்றனர், சற்று அயர்ந்து அரைத்தூக்கத்தில் இருப்பவர்கள், "தட தட" சத்தம்கேட்டுவிழித்துக் கொள்வர். மற்ருெரு வகையினர்—இந்த அட்டவணையில் மிகச்சிலரின் பெயரே சேர்க்கப் படவேண்டும்—மிருதங்கம் அடிப்பவர்களல்ல. வாசிப்பவர்கள். இனிமைதுலங்க வித்வத்வம் விளங்க. இப்படி வாசிப்பவர்களிலும், காதுக்குமட்டும் இனிமைதரும் படியான பொடிஅடிகளைக்காட்டிவிட்டு, கைதட்டுதலைப் பரிசாகப் பெறுபவர்கள் சிலர் உண்டு. ஒரு சிலருக்குமட்டுமே மிருதங்கத்தை வாசித்துக்காட்டவும், வித்வான்கள் மெச்சக்கூடிய விதத்திலே வாசிக்கவும், இனிமையையும் திறமையையும் சமஎடையாக்கிக் கூட்டிக் காட்டவும் தெரியும். புதுக்கோட்டை அம்மையார் இந்த "ரகம்." என்ன அருமையான வாசிப்பு; அதிலே எவ்வளவுநம்பிக்கை, சிரமத்தைப்பற்றி சிரத்தையற்ற வாசிப்பு, அன்று நாலுகிளைச்சவுக்கத்திலே பல்லவி. சாதாரண வித்வான்கள் சஞ்சரிக்கப் பயப்படும் இடங்கள். எதிரேசபையிலே, பலவித்வான்கள் தாளம்போடுகிருர்கள். ஆரம்பத்திலே மிரட்டுகிருர்கள் என்றே சொல்லலாம். அவர்கள்மீது புதுக்கோட்டைமிருதங்கபூஷணி ஒரு பார்வையைச் செலுத்திவிட்டு, மிருதங்க நாதத்தைக் கிளப்பினர்கள், பொறிபறக்கலாயிற்று, இடியும் இடிக்கிறது, இடையிடையே மின்னல் தோன்றுவதுபோல ரசிகர்களின் பற்கள் வெளியே தோன்றித் தோன்றி மறைகின்றன. காமும் கருத்தும் ஏககாலத்தில் கடுவேகமாகச்செல்கிறது, தாளம்போட ஆரம்பித்தவர்கள், மிருதங்கம் வாசிக்கும்அம்மையை மிரட்ட முடியும்என்றுமனப்பால்குடித்ததுபோய் தாங்கள் மிரண்டு தாளத்தைத்தவறிவிட்டால் என்னசெய்வது என்று திகில்கொண்டு, தாளம்போடலாயினர். இதற்குள், அம்மையின் வித்வத்திறமை வீறுகொண்டுவிட்டது. காகோஷம் மீண்டும் மீனாட்சிசுந்திரத்தின் தவுல் வந்துவிட்டதோ என்று எண்ணும்படி இருந்தது. அவ்வளவு புகழை புதுக்கோட்டை இரங்கநாயகி அம்மையார், வாங்கிக்கொண்டு ஒருசிறு புன்சிரிப்பைச் சபையிலே வீசிஎறிந்துவிட்டு, வழக்கமான முகபாவத்துடன், வாத்சல்யத்தோடு தமது வாத்யத்துடன் விளையாடினர்.

குளிக்கரை தோழர் பிச்சப்பாவின் நாதஸ்வரம் அன்றிரவு அருமையாகஇருந்தது. அன்று அவர்வாசித்த "பைரவி" ரசிகர்களுக்கு விருந்தாகஇருந்தது.

7—1—45மாலை, திருவாரூர் தோழர் டி. வி. நமச்சிவாயம் சிவவடிவேல், பாலு, ஆகியோரின் பக்கவாத்யத்துடன், இசை இன்பத்தை அளித்தார். திருப்பாம்பரம் சாமிநாதப்பிள்ளை, குழலில் இசையைக்கூட்டிக் காட்டினர் என்ருல் டி. வி. நமச்சிவாயம், குரலில் அந்தக் குழலிசையைக் கூட்டிக்காட்டினர்என்று சொல்லலாம், அவ்வித இனிமைதோய்ந்திருந்தது அந்தஇசையில். மெருகுஏறி ஏறி, மதுரக்குணம் ததும்பிநிற்கிறது குரலிலே. அந்த இனிமையுடன் திறமை தோழமைபூண்டுஇருப்பதால், சுவைபயனுள்ளதாகஇருக்கிறது. பூஷாவணி, பகுதாரி, உமாபரணம், முதலிய இராகங்களை, இலட்சணமாகவும் கச்சிதமாகவும் விளக்கி, சிந்துபாடும் சிற்ருறுபோல, மளமளவென உருப்படிகளை வீசிவீசி ரசிகர்களுக்கு விருந்தூட்டினர், வித்வத்துவத்தைத் தோழமைகொண்டிருக்கும் டி. வி. என். சங்கராபரண ஆலாபனம், "சபாஷ்" பட்டத்தையும், பாரதிதாசனின் 'வெண்ணிலாவும் வானும்போலே' என்றஇசை, "அருமை! அருமையடா செல்லத்தம்பீ" என்ற பாராட்டுரையையும் வாங்கித்தந்தது. வானத்திலேவெண்ணிலா அழகுறவிளங்குவதுபோல், இசை உலகிலே இந்த இளவரசன் விளங்குகிருன். மண்டலாதிபதியாக அதிகநாட்கள் பிடிக்காதுஎன்றுகூறிப்பாராட்டினர் ரசிகர்கள்.

"ஏது செம்மங்குடியா பாடுவது?" என்றுகேட்கவேண்டிஇருந்தது, அன்றிரவு தோழர் டி. எம்.தியாகராஜன்பாடியபோது. செம்மங்குடியின் ஜோடனையும் பாணியும், தத்ரூபமாக்கப்பட்டதுடன், தோழர் தியாகராஜன், தமது ஆழ்ந்த திறமையையும் விசேஷப்பயிற்சியையும், அபூர்வமானமுறையிலேகாட்டினர் தமது இசைமூலம். காம்போதி ஆலாபனம், மிகக்கவர்ச்சியாகஇருந்தது. கல்யாணி,சஹானு,பூபாலம் ஆகியவற்றைத் தொடுத்துச் சமர்ப்பித்தார். "தமிழேதமிழரின் செல்வம்" என்று சபையிலே பலர் பாடும்படியானஅளவு, உள்ளத்தை உருக்கும்முறையிலே, அன்றிரவு அண்ணமலைப் பல்கலைக்கழக இசைப்புலவர் மயிலம் தோழர் வஜ்ஜிரவேலு அவர்களின் இன்னிசைஇருந்தது. திராவிட மக்களின் எண்ணத்தைத் தடவித்தடவி, அந்த நாதத்தோடு இலயித்து, உணர்ச்சிப் பெருக்குடன் பாரதிதாசனின் "அந்த வாடாவுதான்எந்தநாள்வரும்" "தலைவாரிப் பூச்சூடிக்கொண்டு" முதலியபாடல்களை மிக அழகாகப்பாடி பாட்டுக்குப் பாட்டுச்சபையினரின் சந்தோஷத்தைப் பரிசாகப்பெற்றுத், தானும்மகிழ்ந்து சபையையும் மகிழ்விக்கச்செய்தார்.

8—1—45மாலை, இன்னிசைப் பிரயோகர் சிதம்பரம் தோழர் ஜெயராமன் அவர்கள் தமது இசைவிருந்தைக்காட்டி மக்களின் நன்மொழிஎனும்பரிசை, தட்டிப் பறித்துக்கொண்டுபோய்விட்டார், ஔவையாரின் அருந்திறனை இசை மூலம்காட்டிய பெருமையைத் தோழர் ஜெயராமனுக்குத்தருவதிலே தமிழகம் மகிழ்கிறது.

"பாட்டைக் கேட்டனையா?
பாட்டிபாட்டைக்கேட்டனையா?
ஔவைப்பாட்டி பாட்டைக்
கேட்டனையா?"

என்று, சொல்விளங்க, பொருள்துலங்க, இசையின் புதுமைக்கருத்து குலுங்க, வித்வத்துவம் அலங்கரிக்க, அவர்பாடும்போது, மக்கள்அடைந்த ஆனந்தம் அளவிடமுடியாது. 21 பாடல்கள். ஒன்றுக்கொன்றுவாங்கினதல்ல. மளமளவென்று மாடிப்படிக்கட்டின் மீதுஏறி, உலவிடும் அரசிளங்குமரன்போல, ஜெயராமன் அன்று இசைஅரங்கிலே ஜொலித்தார். வராளி, செஞ்சுருட்டி, பரஸ்ஆகிய இராகங்களை, மாலையாக்கிக்காட்டினர். பவுனிஇராகத்திலேபாடித் தமிழர்களுக்குச் சுதந்திரச்சூரியன் உதயமாகப் போகும் நற்செய்தியைக்கூறினர். புத்தப்புது வசந்தம் பூத்துக்கனிந்ததடி, என்று இராகமாலிகையில் இன்பப்பொழிலுக்கு இசைவெள்ளத்தோடு ரசிகர்களை அழைத்துச்சென்றுநிறுத்தினர்.

அந்த இன்பப்பொழிலிலே நாதஸ்வர ஏகசக்ரவர்த்தி திருவாவடுதுறை ராஜரத்தினம், ஜோதி மயமாக வீற்றிருந்தார், பக்கநாயனமாகத்தோழர் பிச்சப்பாவடன். தவுல் ராகவன் தயாராகஇருந்தார், துணைவாத்தியமாகசங்கரன்சகிதம். இரவு 10 மணிக்குத்துவங்கிற்று, நாயனக்கச்சேரி இரவு இரண்டு மணிக்கு முடிந்தது, இடையே கடிகாரத்தைப் பார்த்தவர்கள் மிகச்சிலரே! கடந்தஐந்துவருஷங்களிலே அன்று அன்பர் இராஜரத்தினம் வாசித்ததுபோல, வாசித்ததில்லை என்னலாம், அவ்வளவு அபாரமாக இருக்கிறது என்று ரசிகர்கள் புகழ்ந்தனர். ஆரம்பமுதல் இறுதிவரையில், மக்கள் அந்தநாத இன்பத்தில் கட்டுண்டு, களிப்புக்கள் உண்டு இருந்தனர். அன்று அவர்வாசித்த "சண்முகப்பிரியா" வைக்கேட்டவர்கள் என்றும்மறக்கமுடியாது. ஏறக்குறைய இரண்டுமணிநேரம் சண்முகப்பிரியாவுடன் கொஞ்சினர்! என்னென்னபிடிகள்! எத்தனைவிதமான வாத்யங்கள், அந்த ஒரே வாத்தியத்தின்மூலம்! யாழ், வீணை, பிடில், குழல், பாண்டுவாத்யம், சித்தார், தில்ரூபா, எதைஎதையோ கேட்டிருக்கிருேம், அவ்வளவு வாத்யங்களையும், அந்த மாக்குழலுக்குள் திணித்துக்கொண்டுவந்துவிட்டாரா இந்த "மாயாவி" என்று வியந்துகேட்கவேண்டிய முறையிலே, அன்றைய வாசிப்பு அமைந்திருந்தது. வைரம் ஜொலிப்பதுபோலபிரகாசகள்!

(6-ம் பக்கம் பார்க்க.)

## ஒரு வசீகர வரலாறு.

4-ம் பக்கத் தொடர்ச்சி.

'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன பயனுமில'

என்று எழுதிஇருந்தார்! அந்தக்கண்ணொடு கண் காணத்தலைப்படும்நேரத்திலே கண்டுவிட்டார் சொக்கலிங்கம் செட்டியார், சோகித்தார். மருட்சி அடைந்தார், தங்கமான நமது கண்ணுசாமி ஏன் மாறிவிட்டான்? மாசமறுவற்ற அவன் மனத்மா கெட்டுவிட்டது? என்று துக்கித்தார். அவன்மட்டுமென்ன, துக்கப்படாமலா இருந்தான்? எவ்வளவு அழகு! அழகு தங்கும் பருவம்! பருவஅழகுகொண்டுள்ள அங்கங்கள்! அங்கங்களைத்தாங்கிக்கொண்டு தங்கக்கொடி! அப்படிப்பட்ட கலியாணிக்குக் கணவன் இல்லை! கைம்பெண்! நிலவுக்குத்திரையிட்டுவைப்பது போல, புனுகு ஜவ்வாதைச் சிமிழியில் இட்டு மூடிவைப்பதுபோல, கலியாணியின் அழகைக், கட்டுப்பாடு என்ற பெட்டிக்குள் மூடிவைத்திருக்கிறார்கள்! பெட்டிப்பாம்புபோலவா படுத்துக்கிடக்கும் இச்சை! அதுபெட்டிக்கு அடியிலே சிறுதவாரம்செய்துகொண்டுவெளியேவந்துவிடுகிறது. சொத்துஇருந்தும், சொர்ணபிம்பம்போன்ற உருவம் அமைந்திருந்தும், கலியாணிக்குக் கணவன் இல்லை! உலகிலே ஆண்களா இல்லை? கலியாணியைக்கண்டும் கவலைகொள்ளாத ஆடவன் குருடனாகவன்றோ இருக்கவேண்டும்! அவளைப்பார்க்கப் பார்க்க, என்மனம், காலை ஏறஏற ஜுரவேகம் அதிகரித்துக்கொண்டேபோகும் காய்ச்சல்காரன் போலாகிவிடுகிறது. ஜுரம்முற்றிஜன்னி பிறந்துவிட்டால் பிதற்றுவார்களாமே அதுபோலாகிவிடும்போலிருக்கிறது என்நிலை—என்று கண்ணுசாமியும் துக்கித்தான், சோகமுற்றான்.

எப்போதாவது ஓர் சமயம் கலியாணியின் சிரிப்பு சிகிச்சை முறையாகப் பயன்படும். மற்றநேரங்களில் அவன் மனக்குரங்கை அடக்கப், பார்த்துப் பார்த்துத் தோற்றுக்கொண்டிருந்தான். கடைவேலையிலேகவனம் குறைந்ததற்குக் காரணம், கலியாணி! தேகம்மெலியத் தொடங்கியதற்குக்காரணம், கலியாணி! முதலாளியின் கோபம் கண்ணுசாமிமீது பாயும்படிநேரிட்டதற்குக்காரணம், கலியாணி! டைரி எழுதுவதற்குப் பதிலாகச், செட்டியார்,

கண்ணுச்சாமிக்குச் சம்பளத்தில்
இரண்டுரூபாய் குறைக்கவேண்டியது

என்று வழக்கமான வசனகவிதையை அதன்பொருளைத் தெரிந்தோர்தெரிந்துகொள்ளட்டும் என்ற முறையிலே எழுதிவிட்டார்.

ஆதிநாராயணநாயுடு, "என்னமோ பொறுத்தவேளை" என்று பேச்சால்திருப்திப்படலானார். சீதாலெட்சுமி, "அந்த இரண்டு ரூபாயினால் உங்களுக்கென்ன பிரமாதமானசெலவா ஏற்பட்டுவிட்டது. ஏழை அவன். அவன்மீது பாய்கிறீரே" என்று வக்கீல்வேலைசெய்துபார்த்தாள். வழக்குதள்ளுபடியாகிவிட்டது, அப்பீல் கோர்ட்இல்லை!!

1938ல் குணவானாக இருந்த கண்ணுசாமி 1939ல் அதாவது ஒரே வருஷத்திலே, தனக்குச் சோறிடும்"தர்மதாதா"விற்குத் துரோகம் செய்யும் தூர்த்தனாக மாறிவிட்டான்! ஊரிலே நம்மைப்போல எத்தனையோ, விதவைகள். நமது தலை எழுத்துப்போலாகிவிட்டது, என்றபேச்சினாலும் நினைப்பாலும் பருவ உணர்ச்சியைக்கட்டுப்படுத்திப் பார்த்த பரிதாபத்துக்குரிய கலியாணி, "நான்என்ன செய்யட்டும்? நானும் எவ்வளவோ முயன்றுதான் பார்த்தேன் முடியவில்லை இதிலென்ன அதிசயம்! முல்லை, கொடியிலே பூத்திருக்கும்போது, சாலையிலே நடப்பவன் அந்த நறுமணத்தை ரசிக்கிறான், அதற்கு முல்லை என்ன செய்வது! கண்ணுசாமியை. இங்கே ஏன் உலவவிட்டீர்கள்? காந்தத்தை ஏவிவிட்டு, இரும்புக்குச் சட்டம் இடுவதா? முடியுமா? வீணையைமீட்டிவிட்டு, இசை எழும்பக்கூடாது என்று கட்டளையிடுவதா? முட்டாளல்லவா செய்வான் அதனை—"என்றெல்லாம், வாதாடக்கூடிய வக்கிரபுத்திக்காரி"யாகிவிட்டாள் கலியாணி, ஒரே வருஷத்திலே! அவள் பாபம் உண்மையிலே என்ன செய்வாள். சொக்கலிங்கம் செட்டியார், இச்சை நசித்துக்கொண்டேபோகும் பருவத்தினர், ஆகவே அவருக்கு உலகமாயை, வாழ்க்கையின்அனித்யம், காமவிகாரத்தினால் வரும்அபசாரம் ஆகியவைகள், மனதிலே குடிகொள்ள முடிந்தது. கலியாணியோ, அலை மோதிடும் மனம். அதை அடக்கமுடியாத பருவம், நாளுக்கு நாள் அலையின் வேகம் அதிகரித்துக் கொண்டிருந்தது—குற்றம் அவளுடையதா? செச்சே! அவள்என்ன செய்வாள்?பருவம் அவளைப்பணியவைத்தது.

கடை குமாஸ்தாவாகக் கண்ணுக்குத் தெரிந்த கண்ணுசாமி, "அப்பாவுக்கு மிக்க வேண்டியவர்" என்ற ரூபமெடுத்து "காலையும் மாலையும் கனியோ மலரோ, கடையிலிருந்து கொண்டுவந்து தரும் பக்தன்" வேடத்திலே தோன்றி, கடைசியில் காதலனாகவே காட்சியளித்துவிட்டான். அவள், வீதிவழியியே போய்க்கொண்டிருந்தவனைக் கைபிடித்து இழுத்துவரவுமில்லை. அவள் இருக்கும் இடத்துக்கு அவனை அனுப்பியது, அவள் தந்தைதான்! அவன் வசந்தத்தின் தூதனாக வந்தான், அந்த வடிவழகியின் மனதிலே இடங்கொண்டான், அதற்கு அவள் மீது குறை கூறிப்பயன் என்ன?

அந்த ஒருவருஷத்திலே, நடந்ததனைத்தும் அவளுக்கு நன்றாக நினைவிருந்தது.

1938ல், தங்கமானவன்,சாது! 1939ல் அவனே தறுதலை, போக்கிரி!—இது செட்டியாரின் கணக்கு. அவர் கணக்குப்படி பார்த்தால் 1938ல் நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாகஇருந்த கண்ணுசாமி, 39ல் நயவஞ்சகனாகிவிட்டான். அந்தஒரு வருஷத்தில் புத்திசாலிஎன்று புகழ்ந்த செட்டியாரே அதேஆசாமியைமுட்டாள் என்று தூற்றினார். பைத்யக்காரன், ஒன்றும் அறியாதவன் என்று எந்தக்கண்ணுசாமியைச் சொன்னாரோ. அதே பேர்வழியை, கைகாரன், ஆஷாடபூதி என்று திட்டலானார். வா! தம்பீ உள்ளே என்று அன்போடு 1938ல் அழைத்தவர்,1939ல் அவனாக உள்ளே நுழைந்தால்; "போடா கழுதே! வெளியேபோய் இரு!"—என்று விரட்டலானார். இப்படி அவர் மாறிவிட்டார். அதுபோலவேதான் கலியாணியும் மாறிவிட்டாள். மாறுதல் சகஜந்தானே!

ஆண்பிள்ளைகள் எதிரிலேநாம்போவானேன்—என்று இருந்தாள் முதலில். செட்டியார்தான் "அடபைத்யமே! யாரும்இல்லைம்மா நம்மகண்ணுசாமி"என்று தைரியம் கூறினார். கண்ணுசாமியிடம் அவள் பேசுவதே கிடையாது, செட்டியாராகவேதான் பேசும் வழக்கத்தை உண்டாக்கிவைத்தார்! கடையிலே அவர் உட்கார்ந்துகொண்டு வீட்டுக்குக்கண்ணுசாமியை, "கல்யாணிக்குக்காரப்பலகாரம் என்னவேண்டும் என்றுகேட்டுக்கொண்டு வா" என்று சேதிசொல்லி அனுப்புவார். அவள் ஏதோ வேண்டும் வேண்டாம் என்று இரண்டேபேச்சுப்பேசி அவனை அனுப்பிவிடவேண்டும் என்றுதான் நினைத்தாள் முதலில். ஆனால் அவனுடைய பார்வையிலே ஒருபாசம் இருந்தது, பேச்சிலே ஒருமயக்கமருந்துகலந்து இருந்தது. ஆகவே, கலியாணியின் அகமும் முகமும் மலரத்தொடங்கிற்று. அதற்கு அவள்என்னசெய்வாள்? அவளைக் கேட்டால் தெரியும், யார்மீதுகுற்றம்என்பது. கலியாணிகிடக்கட்டும், அவளுடைய கண்களைக்கேளுங்கள், "இப்படி நீ அக்ரமத்தின் மீது ஆசைப்படலாமா? காம இச்சைதகுமா? கண்ணுசாமியிடம் ஏன் காதலைச்சொரிந்தாய்?" என்று கேட்டுப் பார்த்தால் தெரியும்! பேசமுடியாது, கண்ணால்! ஆனால் இரண்டொரு முத்து உதிரும். அந்தக் கண்ணீரின் பொருள் என்னதெரியுமா?'பைத்யக்காரஉலகமே! பழிகாரஉலகமே! நான் திடீலென்றுதாவிக்குதித்தேன் அந்தத்தங்கரூபன் மீது? இன்று, என்னிடம் தாபம் தளும்பிக்கிடப்பதைக்காண்கிறாயே, இதே கண்களிலே, முதலிலே, என் இந்தக் கண்ணுசாமிஅடிக்கடி நம்மைஒருவிதமாகப்பார்க்கிறான் என்றகோபம் குடிகொண்டிருந்தது. அந்தக்கோபத்தை அவன்சட்டைசெய்யாமல் இருந்தான், என்ன துணிவு இவனுக்கு, என்று கோபத்தைமேலும் கக்கினேன். அவனை அது சுடவேஇல்லை. அவன் முன்போலவே தனது அன்பை

(10-ம் பக்கம் பார்க்க)

## ஒரு வசீகர வரலாறு.

9-ம் பக்கத் தொடர்ச்சி:

அபிஷேகித்தபடி இருந்தான். எதுவந்தாலும் வரட்டும் என்றதுணிவுடன் இருக்கிறான், பாவம், அவனுக்குஅவ்வளவுஆசை இருக்கிறதுபோலும்என்றுஎனக்குத்தோன்றிற்று. அதனால்பரிதாபம்பிறந்தது. அந்த உணர்ச்சியை அவன்பயன்படுத்திக்கொண்டான், அதுகண்டுநான்பயத்தைப்பொழிந்தேன் அவன்புன்சிரிப்புடன் என்னைப்பார்க்கலானான். சே! அவனுக்குள்ள தைரியத்தில் ஆயிரத்தில் ஒருபாகம்கூட நமக்கு இல்லையே, நாம்என்னகோழையா, என்ற நினைப்புபிறந்தது. அப்போது சபலம்குடி ஏறிவிட்டது. சபலம்வெகு விரைவிலே பிரேமையைக்கூட்டிவந்து குடி ஏறச் செய்துவிட்டது. இப்போதுதாபம், என்னிடம் ததும்பிக்கிடக்கிறது. இதை அறியாமல், என்னைக்கண்டிக்கிறாயே கன்னெஞ்சுபடைத்த உலகமே! கைம்பெண்ணின் கண், எவ்வளவு போராட்டங்களுக்குப்பிறகு; தாபத்துக்குஇடமளிக்கநேரிட்டதுஎன்பதைஅறிவாயா? உனக்கென்ன தெரியும்? தெரிந்தால்கூட நீ ஊமை! கேள்விகேட்கமட்டும் உனக்கு வாய்உண்டேதவிற, பதில்சொல்லவேண்டிய அவசியம்வந்ததும்நீஊமையாகிவிடுகிறாய்! உன்னிடம் எனக்கென்னபேச்சு!'—என்பதுதான் அந்தக்கண்ணீரின்பொருள். அறிந்தோர் அறிவர்; அறியாதார் பலர், எனினும் பயனில்லைஅவரால். அந்தக்கண்களை அதே நேரத்தில் கலியாணியின் கரம் துடைப்பது காண்பவர்கள், "கண்களைக் கசக்கிக்காட்டுகிறாள்கள்ளி!" என்றுவழக்கமானபேச்சே பேசுவர். அவர்கள் அறியார்கள், அவளுடைய கரம், கண்களைத் துடைப்பதல்ல, அது! மெதுவாகத்தடவிக்கொடுத்துக்கொண்டு, தன்கஷ்டத்தை எடுத்துக்கூறி, கலியாணியின்கண்களுக்கு ஆறுதல்கூறும் அழகான காட்சி அதுஎன்பது.

"கலங்காதே கண்ணே! நீ உனக்குத்தான் இந்தக்கஷ்டம் ஏற்பட்டதுஎன்று நினைக்கிறாய். பைத்யக்காரி! நான்பட்ட கஷ்டம் உனக்குத்தெரியுமா? கேளடி கதையை! அன்றொருஇரவுஅவர்என்னைத் தொட்டார், முன்அறிவிப்புஇன்றி. அப்போது அவரை உதறித்தள்ளியது கை; பிறகு ஓர்நாள் உள்ளே தாய்இருக்கிறாள் என்பதைச்சுட்டிக்காட்டும் சிகப்புக்கொடியாகமாறி, அதற்குப்பிறகு, சத்தம்செய்யாமல் வாஎன்றுவாயைப்பொத்திக்காட்டத்தொடங்கி, போகாதேஇரு, இதோ வந்துவிடுகிறேன் என்று சைகைசெய்து, உன்னை என்னசெய்கிறேன்பார் என்று விளையாட்டுக்குமிரட்டும் குறிகாட்டி, பிறகு அவரைஅணைத்துஆனந்தம்பெற்று, இன்று அடிவயிற்றைத்தடவி அல்லற்படுகிறகதை உனக்குத்தான்தெரியுமா? உலகுக்குத்தான் தெரியுமா?"—என்று கலியாணியின் கரங்கள்கூறிக்கண்களுக்குத் தேறுதல் தரும், உபகாரகாரியம்அது. உலகின்கண்ணுக்கு, அது, கை, கண்ணைக்கசக்கும் செயலாகத்தெரிகிறது. உலகம்! அதற்கு என்னதெரியும் உள்ளத்தைப்பற்றி!

"யாரோ ஆம்பளே வருகிறாப்போலிருக்கு" என்று கலியாணிஅச்சத்தோடு கூறிக்கொண்டிருந்தாள். செட்டியார் தான். "யாருமில்லையம்மா! நம்மகண்ணன்! அசட்டுப்பெண்ணே; அவனைப்பார்த்துவிட்டு என்னம்மாவெட்கம்! நம்மகடைப் பையன்!" என்று தைரியம்சொன்னார். அந்தத் தைரியம் வளர்ந்தபிறகுதான் தெருவாசற்படி அருகே காலடிச்சத்தம் கேட்டதும், "யார்வருவது?" என்று சொக்கலிங்கம் செட்டியார்கேட்டுமுடிப்பதற்குள், கலியாணியால். "யாராக இருக்கும்? நம்மகண்ணுசாமியாகத்தான் இருக்கும்" என்றுகூறமுடிந்தது. காலடிச்சத்தமே அவள்செவிக்கு ஒரு இன்பம்தரத் தொடங்கியவேளைவந்துவிட்டது. அவள் என்னசெய்வாள்! அதற்கும் அடுத்தகட்டத்திலே, கண்ணுசாமி பூனைபோல ஓசைசெய்யாமல்வருவதும், தன்ஒய்யாரியுடன் குலவுவதும், ஆள்அரவம்கேட்டதும்மெள்ள நழுவிவிடுவதும், "யாரோ வந்ததுபோலச் சத்தம்கேட்டதே யாரம்மா அது? என்று தாய்கேட்கக், கலியாணி, "யாரும்இல்லேம்மா! நம்ம கண்ணுசாமிதான்" என்றுசொந்தம் பாராட்டிப் பதில் கூறுவதுமாகநிலைமைஇருந்தது. இவ்வளவுக்கும்காரணம், கலியாணியா? இந்த நிலைமையைக்கண்டும், வளரவிட்ட, நிலைமைஉண்டாகாமலே தடுக்கத்திறமையற்றுபோன செட்டியாரல்லவா இவ்வளவுக்கும்காரணம்!! கலியாணி அப்படிஒன்றும் தொட்டதும் துவண்டுவிடவில்லை, கண்ணுசாமியும் கண்டதும் காதல் கொண்டு, கைபிடித்துஇழுத்துவிடவில்லை. இருவர் மனதிலும் பலமான போராட்டம், பல இரவுகள்.

"நீவிதவை! தாலிஇழந்தவள், தெரிகிறதா? தப்புதண்டாவிலே மாட்டிக்கொள்ளாதே. உனக்கு மட்டுமல்ல, குடும்பத்துக்கே கெட்டபெயர்உண்டாகும்"—என்று தலையணையின் வலதுபக்கம், கலியாணியின்காதிலே உபதேசம் செய்யும். இடதுபுறத்திலே இருந்துகிளம்பும் குரலோ,

"உன் அழகும் இளமையும் வீணாகப் போகிறது. வாலிபவிருந்தை உண்ணாமல்வாடுகிறாய் உன்கணவன் இறந்துவிட்டான், நீ என்ன செய்வாய் அதற்கு! போனவன், உன்னுடைய உணர்ச்சியையும் கவர்ச்சியையும் பறித்துக்கொண்டா போய்விட்டான். இல்லையே! தலைசீவிக்கொண்டு நிலக்கண்ணாடியிலே பார் உன் அழகை! அதை அவனுக்கு அர்ப்பணம் செய். உன்னை அவன் உள்ளன்போடு நேசிக்கிறான்." என்று தூதுபேசும். வலதுபுறம் உபதேசமொழி, இடதுபுறம் இன்பத்தூதுமொழி, என்றவகையில்தலையணை, கலியாணிக்குப் பல இரவுகள் போதனைபுரிந்தது. இடதுபக்கமும்திரும்பிப்படுக்காமல், வலதுபுறமும் சாயாமல், நேராகப்படுத்துக்கொண்டு, இரண்டுவிதமான பேச்சையும் கேட்கமறுத்தாள், கலியாணி. முடிந்ததா? அதுதான் இல்லை! படுக்கைஅறையின் சுவறுகளிலே தேவன் தேவியோடு திருக்கோயில்கொண்டிருக்கும் காட்சியும், சினிமா நட்சத்திரங்கள் காதலருடன் கொஞ்சும் காட்சியும், படங்களாக இருந்துகொண்டு, கண்ணுக்கும் கருத்துக்கும்கசையடிதந்தன! கண்ணை மூடிக்கொள்வாள், சில இரவுகளில், இக்காட்சிகளைக் கண்டால் தானே கருத்துக்குத்தொல்லைதரும்என்று எண்ணி, ஆனால் அந்த அழகியின் நிலைமையை என்னென்பது! கண்களைமூடினதும். கண்ணுசாமி வந்துநிற்பான், புன்சிரிப்புடன், பசிநிறம்பியகண்களுடன்!! அந்த மனக்காட்சி படக்காட்சிகளைவிட அதிகக் கஷ்டம் தரும்! மீண்டும் தலையணைமீது வலதுபுறமோ, இடதுபுறமோ சாய்ந்துபடுப்பாள் அந்தப் பாவை. இரண்டுபுறமும் இன்பத்தூதுமொழி பேசும்!! என்செய்வாள் கலியாணி!

"கண்ணு தூக்கம்வரவில்லையா? என்? கொசுக்கடியா?" என்று கலியாணியைச் சில இரவுகளிலே தாயார் கேட்பதுண்டு.

"ஆமாம்" என்றுபதில்பிறக்கும் கலியாணியிடமிருந்து. தான் கேட்டதற்குத்தான் அந்த "ஆமாம்" பதிலாகக்கிடைத்தது என்றுஎண்ணிக்கொள்வாள்தாயார்! கலியாணி, "ஆமாம்" என்றுசொன்னது தன் தாயாரின் கேள்விக்குஅல்ல. அவள் மனதிலே, சதாஎழும்பியபடிஇருந்தகேள்விக்கு அளித்தாள் அந்தப்பதிலை.

"என் வீணாகமுயற்சிக்கிறாய் பெண்ணே! அவன் உன்நெஞ்சிலே குடிபுகுந்துவிட்டான். இனிஅவனை உபதேசமோ உருட்டல் மிரட்டலோ எதுவும் வெளியேற்ற முடியாது. காலம், உன்சம்மதத்தைக்கேட்டுக்கொண்டா உன்கணவன் உயிரைப்பறித்துக்கொண்டது! அதுபோலவே, உன்நெஞ்சிலே அவன்புகுந்துகொண்டது, உன்னைக்கேட்டுச் சம்மதம் பெற்றபிறகுஅல்ல. நீ எவ்வளவோ தடுத்தாய், போரிட்டாய், அவனைச்சுட்டுவிடுவதுபோலப்பார்த்தாய், மிரட்டிக்கூடப் பார்த்தாய், அவன் நெஞ்சம் கலங்கவில்லைபின்வாங்கவில்லை நீஎதிர்க்கஎதிர்க்க அவனுடையஉறுதிபலப்பட்டது, நீஉதாசீனம்செய்வதுபோலப் பாசாங்கு செய்யச்செய்ய அவனுடைய பிரேமை ஒன்று பதினாயிரம் என்ற அளவிலேவளர்ந்தது. இதோபார், கலியாணி! அதேகண்ணுசாமி உன்னைக்கலியாணம்செய்துகொள்ளச் சம்மதித்தால் உனக்கு என்னதடை? பதறாதே! தாலிஇழந்தவளுக்குக் கலியாணமா என்று தாத்தாகாலத்துக்கதை பேசாதே. தாலி! கட்டுவதற்கு ஆள் இருக்கும்வரை, தாலியைஇழப்பதுஎன்ற பதத்திலே பொருள் எது? இப்போது

(7ம் பக்கம் பார்க்க)

## அம்மாமிகள் அழுகுரல்!

2-ம் பக்கத் தொடர்ச்சி.

தைச் சட்டமூலம் தடுத்த காலத்திலும் இந்த வைதீக வேட்டைகள் வீண்புரளி செய்ததும், பின்னர் படிந்து வந்ததும் சர்க்கார் அறிந்ததே.

ஐயரும் ஐயங்காரும்மட்டும்இந்தஎதிர்ப்பைச் செய்வதாக எண்ணத்தேவையில்லை. அக்கிரகாரத்து அம்மாமிகளும்ஆர்ப்பரிப்பது எதற்கென நமக்கு விளங்கவில்லை.

தமிழ்நாட்டின் சில பகுதிகளில் அம்மாமிகள் கூட்டங்கள் கூடுவதாகவும், ஹிந்துலா திருத்தத்தைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றுதாகவும்—தினே தினே அவர்கள் ஜாதி பத்திரிகைகளில் செய்திகள் பக்கம் பக்கமாகவந்துகொண்டிருக்கின்றன. என்னே விந்தை! பெண்ணுக்குச் சொத்துரிமை கொடுக்க ஆண்கள் மறுப்பது இயற்கை யெனலாம். ஆனால், இன்று அனுபவிக்காதசொத்தில் பெண்களுக்கும் பங்கு இருக்கவேண்டும் எனச் சொல்லும் மசோதாவை, ஏன் இவர்கள் எதிர்க்கவேண்டுமோ நாம்அறியோம்.

ஓர் ஆண் பல பெண்களை மணப்பதையும் பிரஸ்தாப மசோதா சில விதிவிலக்குகளோடு தடை செய்கிறது. இதுவும் கூடாதென்கிறார் அம்மாமிகள். விவாகரத்தையும் கண்டிக்கிறார்கள் இவர்கள்.

ஹிந்து மதத்தில் இன்று நடந்துவரும் மண முறையும், விவாக ரத்தோடு கூடிய மண முறையும் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது மேற்படி மசோதாவில். இந்த மசோதாப்படி மாற்றம்விரும்பாத வைதிகர்கள், இன்றுள்ள உரிமையோடு மணஞ் செய்துக்கொள்ளலாம். சிவில் விவாகச் சட்டபடி மணஞ்செய்துகொள்ள விருப்பமுடையவர்களுக்கும் இடமிருக்கிறது. வைதீகர்களுக்கும் சீர்திருத்தக்காரர்களுக்கும் சம உரிமை இம்மசோதா மூலம் உண்டாக வகை செய்யப்பட்டிருந்தும், அம்மாமிகளும் ஆச்சாரிய புருஷர்களும் இதனை எதிர்ப்பதென்றால், **இவர்கள் கொண்டுள்ள மத வெறி**யின் எல்லையைத்தான் இது காட்டுகிறது.

அம்மாமிகள் புலப்பத்திற்கும்-ஆச்சாரியர்களின் அழுகுரலுக்கும் சர்க்கார்செவிசாய்த்தல் கூடாது. தானும் ஒரு நாகரீக சர்க்கார்தான் என்பதைஉலகுக்குமெய்ப்பிக்க வேண்டுமானால், இந்திய சர்க்கார் உடனே இரு மசோதாக்களையும் சட்டமாக்க வேண்டும். காலந்தாழ்த்துவது கடமையை மறந்ததாகவே முடியும்.

முடிவாக நம்மவர்க்கு ஒரு வார்த்தை கூறி இதனை முடிக்கிறோம். ஹிந்துமதம் என்றால் பார்ப்பன மதம் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தோம். அதில் யாருக்காவது சந்தேகம் இருக்குமானால் அம்மாமிகள் புலப்பத்தைக்கண்டபின்பாவது தெளிவுபெற வேண்டுகிறோம். ஹிந்துலா சீர்திருத்தத்தைக்கண்டு மற்றவர்கள் வாளாவிருக்கும்பொழுது, அக்கிராகாரம் மட்டும் சீற்றங்கொள்வதின் கருத்தென்ன என்பதைக் கவனிக்க வேண்டுகிறோம். ஹிந்துமதத்தின் அவலட்சணம் அப்பொழுதுதான் நன்கு விளங்கும்.

—:o:—

## அங்கேயும் அப்படித்தான்!

[ஜஸ்டிஸ் பார்ட்டி (S. I. L. F.) என்ற பெயரை மாற்றித் திராவிடர் கழகம் எனப்பெயர் வைப்பதை எதிர்ப்பவர் அல்லது விரும்பாதவராகிய தோழர் P. பாலசுப்பிரமணியம் அவர்கள்முதன் முதலில் எந்த ஊருக்குச் சென்று தம்முடைய செல்வாக்கு முழுவதையும் பயன் படுத்தி, அவ்வூர் நகராண்மைக்கழகத்திலும் பிற சில மன்றங்களிலும் வரவேற்பளிக்கப்பட்டுத் தம்முடைய ஜஸ்டிஸ் பார்ட்டி"ப் பிரசாரத்தைச் செய்தாரோ, அதே திருச்சினுப்பள்ளியில் தான்,இதுவரை ஜஸ்டிஸ்பார்ட்டி (S. I. L. F.) என்ற பெயரோடு இருந்த திருச்சிமாவட்டக் கழகம் திருச்சி மாவட்டத் திராவிடர் கழகம் எனவும், திருச்சி நகரத் திராவிடர் கழகம் எனவும் மாற்றப் பட்டுத் தலைவர்-உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நிகழ்ச்சி விபரம் கீழே தரப்பட்டிருக்கிறது.]

### திருச்சி, திராவிடர் கழகம்

திருச்சி ஜில்லா தெ. இ. ந. உ, சங்க (ஜஸ்டிஸ் பார்ட்டி)ப் பொதுக்கூட்டம் (ஜெனரல்பாடி மீட்டிங்) 7—1—45 ஞாயிறு காலை 10-மணிக்குக் கருணாநிதி பார்க்கில் தோழர் K. K. நீலமேகம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெற்றுக் கீழ்க்கண்டபடி தீர்மானங்கள் முழுமனதாக நிறைவேற்றப்பட்டன.

1. சேலம் மாகாண மாநாட்டில் தீர்மானித்தபடி, திருச்சி ஜில்லா தெ. இ. ந. உ: சங்கம் என்றிருப்பதை திருச்சி மாவட்டத் திராவிடர் கழகம் என்பதாக மாற்றுவதென்று தலைவரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் முழுமனதுடன் நிறைவேற்றப்பட்டுத் தோழர் M. A. அருணாசலம் அவர்கள் தலைவராகவும், தோழர்கள் A. அங்கமுத்து, பெருமாள், M. கணேசன், ஆகியோர் உபதலைவர்களாகவும், தோழர் T. P. வேதாசலம் அவர்கள் முறையே பொருளாளர் செயலாளராகவும், மற்றும் 26 பேர் கழக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2. திருச்சி நகர தெ. இ. ந. உ. சங்கமும் திருச்சி நகரத் திராவிடர் கழகம் என மாற்றப்பட்டுத் தோழர் N. சங்கரன் அவர்கள் தலைவராகவும், தோழர் T. திரவியம் அவர்கள் உபதலைவராகவும், தோழர் T. M. முத்து அவர்கள் செயலாளராகவும், தோழர் P. V. சுந்தரம் அவர்கள் துணைச் செயலாளராகவும், தோழர் K. K. சாமி அவர்கள் பொருளாளராகவும், மற்றும் 22 உறுப்பினர்களும் முறையே தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதாகத் திருச்சி நகரத் திராவிடர் கழகத் தலைவர் தோழர் N. சங்கரன் அவர்கள் தெரிவிக்கிறார்.

———

### தேநூர்.

15-12-44ல் இவ்வூர் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் தோழர் S. நாகருபிள்ளை அவர்கள் தலைமையில் பலமுக்கிய நடுநிலையாளர்கள்முன்னிலையிலும் "மனிதவாழ்க்கைக்குக் கடவுள் அவசியமா?" என்பதைப் பற்றித் தோழர் K. சுசீந்திரபெருமாளும் தோழர் வேலப்பனும் ஓர் அரிய சொற்போர் நடத்தியதில் கோயில்வழிபாட்டிற்கெனவீணாகச்செலவழிக்கும் பணத்தைக் கொண்டு தொழிற்சாலைகளையமைத்தலே நன்றென முடிவுசெய்யப்பட்டது.

### விருதுநகரில்

நீதிக்கட்சித்தலைவர்கள், சர். தியாகராயர், பானகல் அரசர், டாக்டர் நாயர், பெரியார் ஈ.வே.இராமசாமி ஆகியோரின் உருவப்படங்களை முனிசிபல் சபைமண்டபத்திலே திறந்துவைக்க, விருதுநகர், நகராட்சி மன்றத்தார் தீர்மானித்துள்ளனர். தலைவர்களுக்குத் தக்கமுறையில் தமது மரியாதையைச் செலுத்தும், விருதுநகர் தோழர். வி. வி. இராமசாமி அவர்களின் இச்செயலை நாம் பெரிதும் பாராட்டுகிறோம்.

தந்தி:—"புறமார்க்" திருச்சி.



# திராவிடர் கழக விழா.

### பம்பாய்

31—12—44-ல் இந்நகர்ப் பிரபல தோல்வர்த்தகர் தோழர் ஈ. க. அழகர்சாமி தலைமையில் திராவிடர் தமிழ் நூல் நிலையத் திறப்புவிழா சிறப்புடன் நடைபெற்றுச் செயற்குழு உருப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் பல தோழர்கள் பல அரியகருத்துக்களைப்பற்றியும் விரிவுரை யாற்றினர்.

### புதுக்கோட்டைத் தனியரசு

28-12-44ல் வலம்புரித்திராவிடர் கழகம் புதுக்கோட்டைத் தனியரசு முதல் கௌன்சிலர் தோழர்கான்பகதூர் P.கலிபுல்லாசாகேப் M.A., B.L, அவர்களால் திறந்துவைக்கப்பட்டுப் பின்பு ஷையார் தலைமையிலேயே பல தோழர்களும், தோழியர் ராஜேஸ்வரி அம்மையாரும் பல பொருள்களைப்பற்றிப் பேசினர்.

### சுவாமிமலை

1-1-45ல் இவ்வூர்த் தோழர் பொ. இரத்தினம் தலைமையில் இளைஞர்இலவச வாசகசாலையின் அலுவலாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### அருப்புக்கோட்டை

29-12-44ல் இவ்வூர்த் தியாகராயவாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஆசிரியர் தோழர் T. K. சுப்பிரமண்யம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டச்சுற்றுப் பிரயாணம் செய்துவரும் மாணவ மணிகள் "திராவிடரின் கடமை" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர்.

### மதுரை

4-1-45ல் இவ்வூர்த்திராவிடத்தொண்டர்படையின் சார்பாகஒருகூட்டங்கூடித் தோழர் C. D. நாயகம், தோழியர் நவநீதத்தம்மாள், தோழர் S. நாராயணசாமி ஆகியோரின் அகாலமரணத்துக்கு வருத்தமும் அவர்கள் குடும்பத்தாருக்கு அனுதாபமும்தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

### சென்னிமலை

31-12-44ல் இவ்வூரில் திராவிடர்கழகம் நிறுவிக் கழகக்குழுவினர்களும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### புவனகிரி

28-12-44ல் இவ்வூர்த் திராவிடர் கழகத்தின் ஆதரவில் தோழர் K. நமச்சிவாயம் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் ரெ. செல்லப்பாவின் வாழ்க்கைத்துணைவி உலோகாம்பாள் அம்மையார், தோழர்C. D. நாயகம்முதலியோர் மறைவுபற்றி ஒரு அனுதாபத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### திண்டுக்கல்

1-1-45ல் இவ்வூரில் பெரியார்மைதானத்தில் மதுரை மாவட்டச் சுற்றுப்பிரயாணம்செய்யும் திராவிடமாணவர்க்குழுவினரால் ஒரு பொதுக்கூட்டம் நடந்தபோதுத்தோழர் இரா. நெடுஞ்செழியன் B.A., Hons. தலைமைவகித்தார். மற்றும் பல மாணவர்கள் "திராவிடநாட்டுப்பிரிவினையின் அவசியம்" என்பது பற்றி விளக்கமுறப்பேசினர்.

### வடவேற்குடி

21-12-44ல் ஷையூர்த் தோழர் V. S. சதாசிவம் கொழுந்தியாள் R. சின்னம்மாள் காலமானது பற்றி ஷையார் இல்லத்தில் நினைவுநாள் கொண்டாடப்பட்டபோது பூசமங்கலம் தோழர் மலைபெருமாள் சீர்த்திருத்த இறுதிக்கடன்என்பது பற்றி விளக்கிப்பேசியபின் சமபந்திவிருந்துடன் கூட்டம் முடிந்தது. அதன் அறிகுறியாகத்'திராவிடநாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது.

### கோவிந்தகுடி

1-1-45ல் இவ்வூர் முஸ்லீம்லீகின் ஆதரவில் தோழர், M. I. உமர் B.A., தலைமையில் தோழர் ஜனாப் ஜின்னா அவர்களின் 69ம் ஆண்டு பிறந்த தினவிழா கொண்டாடப்பட்டது. தோழர் B. தாவூத்ஷா B. A. தோழர் K.K. நீலமேகம் ஆகியோரும் மற்றும்பல தோழர்களும் ஜின்னாவைப்பாராட்டியும், பாகிஸ்தானை ஆதரித்தும் பேசினர்.

### வேலம்புதுக்குடி

29-12-44ல் ஷையூர் முஸ்லீம் லீகின் சார்பாகத்தோழர் ஜனாப் சே. தாவுத்ஷா தலைமையில் ஜனாப் ஜின்னா ஜனனவிழா கொண்டாடப்பட்டது. பல தோழர்கள் ஜின்னாவைப்பாராட்டியும், பாகிஸ்தான் என்பதுபற்றியும் பேசியபின் தேநீர்விருந்துடன் கூட்டம் முடிந்தது.

### சென்னை

31-12-44ல் ஜியார்ஜ்டவுனில் தோழர் பாரதிதாசன் நவீன அறிவு வளர்ச்சிக்கழகத்தைத் திறந்துவைக்கையில் கல்விக்கும் கலைக்குமுள்ளவேற்றுமையையும், கவிதை ஓவியத்தின் பிரிவையும், இசைக்குச்செய்யுளா அல்லது செய்யுளுக்கு இசையா என்பதையும் விளக்கமுறப் பேசியபின் தேநீர் விருந்துடன் கூட்டம் முடிந்தது.

## திராவிட மாணவர் மாநாடு.

தென்னாற்காடு மாவட்டத் திராவிட மாணவர்மாநாடு 3-2-45 சனிக்கிழமை பண்ருட்டிக்கடுத்த புதுப்பேட்டையில் மாணவமணி ஈ.வே.கி.சம்பத்தலைமையில் நடைபெறும். திறப்பாளர் இரெ. இளம்வழுதி, கொடியேற்றுபவர். பி. சனார்த்தனம். மற்றும்பல மாணவ மணிகளும் பெரியார் ஈ. வெ. ரா. C. N. அண்ணாதுரை, பெரியசாமிப்புலவர், பாரதி[தா]சன் ஆகிய அறிஞர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்எனவரவேற்புக்குழுத்தலைவர் தோழர் S. கோவிந்தசாமியும், வரவேற்புக்குழுச்செயலாளர்தோழர்A. R. C, இராமலிங்கமும் தெரிவித்துத் திராவிடத் தோழர்களைத் திரண்டுவரும்படி யழைக்கிறார்கள்.

தென்னாற்காடு மாவட்ட சுற்றுப்பிரயாணம் செய்யும் மாணவமணிகள் 29-12-44ல் கடலூரில் தோழர் மா. பீட்டர் B.A., தலைமையிலும், இரவு பு[து]வண்டிப்பாளையத்தில் ஷையார் தலை[மை]யிலும், 30-12-44ல் பழையவண்டிப்பாளையத்தில் தோழர் கோதண்டராம் த[லை]மையிலும், 31-12-44ல் குறிஞ்சிப்பா[டி]யில் தோழர் இரெ, இளம்வழுதி த[லை]மையிலும் நடந்த கூட்டங்களில் பே[சி]விட்டு 2-1-45 இரட்டணை மிராசுதா[ர்] இராமசாமி ரெட்டியார் நினைவுநாளி[ல்] கலந்துகொண்டார்கள்.

## வருந்துகிறோம்

சர். P. T. ராசன் அவர்கள் இ[ளைய]னும், சூணாம்பேடு ஜெமீன்தார் தி[வான்] பகதூர் G. அருணாசலம் அவர்கள் ம[ரு]மானும், மதுரை மாவட்ட மன்ற[த்] தலைவருமான தோழர் S. சண்முகவே[ல்] ராசன் அவர்கள் 7—1—45ல் சென்[னை] கீழ்ப்பாக்கத்திலுள்ள அவருடைய ம[ன்ன]னார் மாளிகையில் இளம்வயதிலே[யே] இயற்கை எய்தியமைகேட்டு மிக[வும்] வருந்துகிறோம். சர் P. T. ராசன் அ[வர்]கள் தம்உடன்பிறந்தவரின் பிரிவால் [...] முடையாது இயற்கையின் கூற்[...] எண்ணிஆறுதல் அடையவேண்டுவ[தோடு] எமது துயரினையும் அவருக்குத்தெ[ரிவித்]துக்கொள்கிறோம்.

## கண்ணுசாமி மறைவு

தர்மபுரமடத்தின் ஆதீனத் தமி[ழ்ப்புலவ]ரும் சிறந்தசொற்பொழிவாளரு[மான] திரு. காழிசிவகண்ணுசாமிப்பிள்ளை [அவர்]கள் 2—1—45ம் நாள் மன்னார்[குடியில்] மரணமடைந்தார் என்ற செய்தி[கேட்டு] வருந்துகிறோம்.

திரு கண்ணுசாமி அவர்கள் இ[ளமை]யில் பச்சையப்பன் கல்லூரியில் B. A; பட்டம்பெற்றவர். எளிய[நடையில்] பல இனியகட்டுரைகள், கதைகள் [...]கள் தீட்டியுள்ளார். அவர் புல[மைக்குத்] தக்கசான்றுகள் அவரியற்றிய [நூல்]களேயாகும். எனினும் அவர் [...] ஆங்கிலத்திலிருந்து தமிழில் [மொழி]பெயர்த்த "கால்ட்வெல் ஒப்பில[க்கணம்]" என்றநூலே அவரைத் தமி[ழகத்தில்] பேரும் புகழும்பெறச்செய்த[து].

★

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press
317—319 Hodgsonpet Conjeeveram.